தென்மொழி

ஒச்சுங்கள் தோழரே கைகளை வானில்!

ஒச்சுங்கள் தோழரே! கைகளை வானில்!
உரக்கவே கூவுங்கள் 'தமிழ்வாழ்க' என்று!
மூச்சுங்கள் தொளையினுள் நின்றிடும் முன்னர்
முதுதமிழ் இனம்வாழ உழைங்கள், நன்று!
ஆச்சிந்த நூற்றாண்டுக் குள்ளேநம் தமிழர்
அடைந்திட வேண்டுமே தமிழ்நாட்டுக் குரிமை!
பேச்சென்ன? எழுத்தென்ன? செயலுக்கு வருவீர்!
பின்விழப் போகின்ற உடல்,உயிர், தருவீர்!

கூடுங்கள் தோழரே! அணிஅணி யாக!
குரலெடுத் துரையுங்கள்; முழக்குங்கள்; உரிமை!
பாடுங்கள் விடுதலைப் பண்,இசை யோடு!
பரப்புங்கள் கருத்துகள், உணர்வுகள், எங்கும்!
மூடுங்கள் வல்லாண்மைக் கதவினை இழுத்து!
முதுசெலும்பை நொறுக்குங்கள் அதிகாரம் சாக!
தேடுங்கள் வஞ்சரைப் பகைவரைத் தேடித்
தீக்குள்ளே வீசுங்கள் ஆள்வோர்கள் நடுங்க!

மென்முறை பண்பாட்டு மேன்முறை யெல்லாம்
மிகுந்தேறுங் கொடுமைக்குப்பொருந்தாவாம் இன்று!
வன்முறை ஒன்றாலே முதலாண்மைக் கேடர்
வணங்கிடும் நிலையுண்டு முட்புதர் போல!
பன்முறை உரைசொன்னோம்; பாடினோம்; ஏட்டில்
பலவாறாய் எழுதினோம்; பயனேதும் இல்லை!
மின்முறை அதிர்ச்சிசெய் மருத்துவம் போல
மேலேறித் தின்பாரைக் கீழிறக்க வேண்டும்!

சுவடி : 20
ஓலை : 5-6

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1·25 உருவா

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

0: 988: மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம்!

தென்மொழியை நிறுத்தலாம் எனும் தங்கள் சிந்தனையை மாற்றும் முகத்தான் நான் ஒரு சிறு கருத்தை மட்டும் தெரிவிக்கிறேன். தென்மொழியை நிறுத்தவேண்டாம் என எண்ணிய, கருத்தறிவித்த தென்மொழி அன்பர்களுடையப் பெயர்ப் பட்டியல் ஒன்று செய்து, தென்மொழி, நடத்திக்கொண்டிருப்பதால் திங்கள் ஒன்றுக்கு ஏற்படும் இழப்புத் தொகையினை அவ்வனைவரும் பங்கிட்டுக் கொள்வார்களா, என ஒரு வினு எழுப்புங்கள். அதில் என் பெயரும் இருக்கட்டும். அவ்வாறு வரும் இழப்புத் தொகையினை நானும் ஏற்றுக்கொண்டு திங்கள் தோறும் அனுப்பி வைக்கிறேன். இது பற்றித் தாங்களும் சிந்தித்திருப்பீர்கள் என எண்ணுகிறேன். தென்மொழி நிறுத்தப்படலாம் எனும் எண்ணத்திற்கு ஏற்பட்ட பல்வேறு காரணங்களில் பொருளியல் இழப்பும் ஒன்று என்பதால் அதைத் தவிர்க்க இந்தக் கருத்தை வெளிப்படுத்தினேன். தவறிருப்பின் மன்னிக்க.

தங்கள் தொண்டன்

— வி. செயராமன்; வணி. மு. அம்பத்தூர், சென்னை-53

0: 989: செந்தமிழ்த்திரு, அன்பிற்கினிய பெரும் பேரறிஞர் ஐயா! என்றும் நும் தொண்டுள்ளம் இன்றேபோல் இருக்க விழையும் நான் அகவையில் சிறுவன், அறிவிலும் சிறுவன். தங்களால் எழுதப்பட்டுச் சொல்லாய்வறிஞர் தமிழர் ப. அருளி ஐயா அவர்களால் சிறப்பானதொரு முன்னுரையுடன் 1930-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'உலகியல் நூறு' என்ற நூலைப் படிக்கும் வாய்ப்பை இரு நாள்களுக்கு முன்பு அடைந்தேன். ஐயா! தற்பொழுது பார்ப்பனர்களின் கரவான சூழ்ச்சியாலும், நம்மவர்களின் பொறாமையாலும், அரசியல் மூடர்களின் முட்டாள்தனத்தினாலும் தங்களின் உண்மைநிலை மறைக்கப்பட்டாலும் நாட்டு விடுதலைக்கும், தமிழ்மொழி, இன மறுமலர்ச்சிக்கும் தாங்கள் ஆற்றிவரும் தொண்டு எம்போன்ற மொழி, இன, நாட்டுணர்வுள்ள இலக்கக்கணக்கான இளைஞர்களால் எதிர்காலத்தில் வெளிக் கொணரப்படும் என்பது அடியவனின் திண்ணமான எண்ணம். அவ்வெண்ணப்படியே தாங்களும் மொழி, இன மீட்சிக்காகத்

'தோய்ந்தார்ப் பொருட்டுழைத்தல் தொண்டென்ப',

என்றவாறுன தங்களது தொண்டிலக்கணப்படியே இருக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிற்க, ஐயா ப. அருளி அவர்களின் மதிப்பின்படி 'உலகியல் நூறு', எதிர்காலத்தில் திருக்குறளுக்கு இணையான ஓர் உலகப் பொது நூலாகுமென்பதில் எவர்க்கும் ஐயம் வராது.

அத்துடன் என் சிற்றறிவிற்கெட்டியதை உரைக்கின்றேன். தந்தை பெரியார் அவர்களின் கருத்துகளின் மூலம் தொண்டுலகிற்கு வந்த நீங்கள் நம் இன, மொழி அழிவிற்கான காரணம்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன். தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 20] உ0கரு கும்பம்—மார்ச்ஏப்ர-84' [ஓலை. 5-6

என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்-6

கடந்த இருபத்தைந்தாண்டுகள் 'தென்மொழி' நடந்து வருகிறது என்பதும், இதை வாணிக உத்தியுடன் தொடங்கவும் இல்லை; நடத்தவும் இல்லை என்பதும் அனைவர்க்கும் தெரியும். வாணிகத்திற்கென்று இது நடத்தப்பெறவில்லை என்பதற்கு, அதில் விளம்பரங்கள் இல்லாததும், திரைப்படச் செய்திகள் பிற கவர்ச்சிக் கூறுகள் இல்லாமையுமே சான்றாகும். எனவே, 'தென்மொழி'யாலும், 'தமிழ்ச்சிட்டு' இதழாலும் மாதத்திற்குக் குறைந்தது முந்நூறு உருபா இழப்பு ஏற்படுகிறது. ('தமிழ்நிலத்'தால் ஏற்படும் இழப்பு வேறு.) இவ் விழப்பு என் சொற்பொழிவு வரவாலும், என் நூல் விற்பனையாலும், பிற

நன்கொடைகளாலும் ஒருவாறு ஈடு செய்யப்பெற்று, இதழ்களைத் தொடர்ந்து நடத்தி வந்தேன். ஆனால், இக்கால், நாளுக்கு நாள் ஏற்பட்டுவரும் தாள் விலை ஏற்றத்தாலும், இழப்புகளை ஈடுசெய்யமுடியாமலும் தொல்லைப்பட வேண்டியுள்ளது. (இனி, இவ்வளவு இழப்பையும் ஈடுசெய்து கொண்டு இதழ் நடத்தினாலும், பயன் குறைவாக உள்ளதென்பதும் பயன்படுத்திக் கொள்பவர்களும் மக்களுக்குப் பயன்படவில்லையே என்னும் வருத்தமும் இயல்பன்றோ?) பொருள் வருவாயின்மையால் அச்சகத்தையும், அலுவலகத்தையும் விரிவுசெய்ய இயலாத நிலைவேறு உள்ளது. ஓரிருவரை வைத்துக்கொண்டே அலுவலகம் நடந்து வருகிறது. மிகவும் கடுமையான பணி. இடையீடு இல்லாமல் உழைக்க வேண்டியுள்ளது. முதுகலை ஆங்கில இலக்கியம் படித்த என் இரண்டாம் மகன் பொழிலன் முழு நேரமும் ஈடுபடவில்லையானால், இக்கால் என்னால் ஒன்றுமே செய்ய இயலாது. இன்றைய நிலையில் அவனும் நானுமே இதழ்களுக்குப் பெருத்த முதலீடுகளாக உள்ளோம்.

இடையில் தப்பித் தவறி எவரேனும் உதவிக்கு வந்தால், அவர் தம் பெயர் விளம்பரத்தையே மிகவும் எதிர்பார்க்கிறார். (அதுவும் ஒருவகையில் தவறு ஆகாது. ஆனால் தொடர்ந்த தொண்டு செய்யாமலும், ஈகம் ஏதும் செய்யாமலும், தகுதி நிலைகளை வளர்த்துக் கொள்ளாமலும், பெயர் விளம்பரம் ஆக வேண்டும் என்று விரும்புவது முழுத் தந்நலமே அன்றி வேறில்லை. இந்த மன உணர்வால் நாம் எதிர்பார்க்கும் விளைவுகளை விட, தீமைகளே விளைய முடியும்.) அத்துடன் இழப்பில்லாத வரவையும் எதிர்பார்க்கிறார். இயல்பான வாழ்க்கைக்குத் தேவையான அல்லது தான் எதிர்பார்த்த வருவாய், வரவில்லை என்றால், ஏதேனும் ஒரு காரணத்தை அல்லது பழியைச் சுமத்தி விட்டு, விலகிக் கொள்கிறார். இல்லெனில் கூட இருந்தே, ஏதாவது எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். எனவே, எவரையும் துணைக்கு வைக்க இயலாத நிலை. இந்த வகையில், கடந்த காலப் பட்டறிவால் எனக்கு ஓர் அச்சமே ஏற்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

பொருள் வரவைப் பொறுத்த நிலையிலோ, நெருங்கிய அன்பர்களே இதழ்களின் விற்பனைப் பட்டியல் தொகைகளைக்கூட, சரியாக விடுத்து வைப்பதில்லை. முகவர்களில் பலரும் இதழ்களை விற்று ஒழுங்காகப் பணம் விடுப்பதில்லை. பலமுறை எழுதினாலும் ஏதோ சாக்குப் போக்குகள் கூறி விடுகின்றனர். இப்பொழுதுள்ள நிலையில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களின் வழியாக வரவேண்டிய நிலுவையே ஏறத்தாழ இருபதாயிரம் உருபா இருக்கும். ஓரிலக்க உருபா மதிப்புள்ள அச்சிட்ட நூல்கள் வேறு, வீட்டிலும் அச்சகத்திலும் பெரும் பகுதி இடங்களை அடைத்துக் கொண்டு கிடக்கின்றன. விற்பனை ஆகாத தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் ஆயிரக்கணக்கில் இருப்பாக உள்ளன. இத்தனைப் பொருள் முடக்கங்களுக்கும் இடையில், வஞ்சகர்களின் நஞ்சுரைகள் வேறு, நெஞ்சைச் சுருக்குகின்றன. இந்நிலையில் வேறு எவராகவிருப்பினும் முக

மலர்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் கொள்கை உறுதியுடனும் இயங்கவே முடியாது. என் நெஞ்சு முழுவதும், உடல் அணுக்கள் ஒவ்வொன்றிலும், உயிர்க்காற்றிலும் தமிழும், இனவுணர்வும், நாட்டுரிமையும், காழ்த்துக் கலந்து கிடப்பதாலேயே என்னால் துணிவாகவும், நம்பிக்கையுடனும், உறுதியுடனும் இயங்க முடிகிறது.

என் விடாப்பிடியான முக்கொள்கை உறுதிப்பாட்டினைச் சிறிதே விட்டுக்கொடுப்பதென்றாலும், அரசுதவி கிடைக்கும்; பிற கட்சிகளின் அரவணைப்பும் கிடைக்கும்; பொருளும், வீடும் வண்டியும் போன்ற ஏந்துகளும் தடையின்றி வரும். இனி, இத்துணைக்கும் மேலாக, நான் பேசாமல் ஓர் அரசியல் கட்சி வண்டியில் ஏறிக் கொண்டாலோ, விளைவைச் சொல்லவே வேண்டியதில்லை. இல்லை, ஒரு வாணிகம் செய்தாலும், நமக்குள்ள பட்டறிவுக்கு வருவாய்க்குக் குறைவே இராது. ஆனால், இவற்றைச் செய்வதை எண்ணிப்பார்க்கும் உணர்வுகூட என் உயிரியக்கத்தில் இல்லையே! என் செய்வது? தமிழுணர்வையும், தமிழின நலத்தையும், தமிழ் நாட்டு உரிமை முயற்சியையும் சிறிதே விட்டு விட்டு என்னால் உயிர் வாழவே முடியாது.

இத்தகைய தொடர்ந்த அழுத்தங்களாலும், பயனின்மையாலுமே தமிழ்நிலத்தையும் இயக்கத்தையும், எஞ்சியுள்ள என் எழுத்துப் பணிகளையும் மட்டும் செய்யலாம் என எண்ணினேன். நான் தொடக்கத்தில் தென்மொழியையும், தமிழ்ச்சிட்டையும், இயக்கத்துக்கென அண்மையில் தமிழ்நிலத்தையும் தொடங்கியது. வெறும் பெருமைக்காகவோ, புகழுக்காகவோ வருமானத்திற்காகவோ அல்ல என்பது அனைவர்க்கும் தெரியும்.

தமிழ் வளர்ச்சி கருதியே பெரியவர்களுக்காகத் தென்மொழியும், மாணவர்களுக்காகத் தமிழ்ச்சிட்டும் தொடங்கப்பெற்றன. இறுதியாகத் தமிழின மேம்பாட்டுக்கும், நாட்டு உரிமை மீட்புக்குமாக இயக்கமும், அதையொட்டித் தமிழ்நிலமும் தொடங்கப் பெற்றன. ஒரு குறிக்கோளை ஓர் உள்ளுணர்வை வெளிப்படுத்துகின்ற முயற்சிகளே இவை. மற்றபடி நானே அனைத்தையும் செய்துவிட எண்ணிய விளைவுகள் அல்ல. எவரும் உண்மையாய்ச் செய்ய முன்வராதபொழுது எடுத்து நிறுத்தப் பெற்றவை - தாம் இவை. ஆனால் இவற்றைப் பார்த்த பின்னும், படித்த பின்னும்கூட மக்களுக்கு ஓர் உள்ளுணர்வெழுச்சியும் உந்தியக்கமும் தோன்றவில்லையே! எனவேதான் முதலிரண்டை நிறுத்தி விட்டேனும், பின்னொன்றையாகிலும் தொடர்ந்து செய்ய எண்ணினேன். ஆனால் எண்ண அளவாக அந்த உணர்வு தோன்றியவுடனேயே எண்ணற்ற கைகள், மேலும் நான் விரும்பிய செயலுக்குள் என்னைப்போகவிடாமல் தடுத்துநிறுத்துகின்றன. மெல்லவும்முடியாமல் விழுங்கவும் இயலாமல், துப்பவும் கூடாமல், தொண்டையில் சிக்கிய கற்கண்டுக் கட்டியென தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் நின்று தடுமாறுகின்றன. இவ்வகையில் எண்ணி எண்ணி ஓர் இறுதி முடிவுக்கு வந்தே விட்டேன். இதழ்களை இனி நிறுத்த வேண்டுவதில்லை. என்பதே, அது. அவ்வாறானால் அவை

தொடர்ந்து வெளிவர நாம் என்ன செய்ய வேண்டும்? அதனைக் கீழே கூறுகிறேன். அன்பர்கள் கவனமாகப் படித்துக் கருத்தாகச் செயல்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் தொடர்ந்து நடக்க வேண்டுமானால் அச்சக விரிவும், அலுவலக விரிவும் உடனடியாகத்தேவை. அத்துடன், நம் கருத்துகள் இன்னும் விரிவாகவும் விரைவாகவும் பரவ வேண்டுமானால், நூல்களுக்கென ஓர் அச்சீட்டுப் பிரிவும், விற்பனைப் பிரிவும் அதேபோல் உடனடியாகத் தேவை. இவற்றுக்கெனக் கடந்த காலத்தில் பல்வேறு முயற்சிகள் செய்யப்பெற்றன. இன்றும் செய்யப் பெறுகின்றன. ஒன்றும் பொருந்தி வரவில்லை. நேர்மையாகவும் உண்மையாகவும் பொதுநலம் மிக்கதாகவும் ஆன முயற்சிகளையே நாம் வரவேற்பதும், செய்ய விரும்புவதும் எனவே அத்தகைய ஆள்களையே எதிர்பார்ப்பதுவுந்தாம் அதற்குக் கரணியங்கள். அச்சுக் கருவிகளைப் பொறுத்த அளவில், பிற மாற்று இன முயற்சிகளைப் பார்க்கும்பொழுது, நம் கருவிகள் 5 விழுக்காட்டு அளவினவே. அஃதாவது நம் முதலீடு 50 ஆயிரம் என்றால், அவர்களுடையது 10 இலக்கம் முதல் 10 கோடி வரையினது. அவர்களுடைய முயற்சி பெரிய ஒரு கப்பலைக் கொண்டு கடலைக் கடப்பது என்றால், நம் முயற்சி ஒரு கையகலப் பலகையில் அதனைக் கடப்பதைப் போன்றது. இந்த நிலையில் என்ன செய்வது? இதில் கருத்துகளைத்தாம் எப்படிப் பரப்ப முடியும்? ஒரு போராட்டத்தைத்தான் நாம் எப்படித் தொடங்க முடியும்? ‘தமிழ்நிலம்’ கிழமை தோறும் வரவேண்டுமென்றாலும் குறைந்தது. 5 இலக்கம் அல்லது 10 இலக்கம் முதலீடாவது நமக்குத் தேவை. வெளியே இருப்பவர்கள் இதனைக் கணிக்கவே முடியாது. பேசலாம் பலவாறாக அறிவுரைகள் கூறலாம். ஆனால் செய்ய முடியாது. இதற்கெல்லாம் வாணிக நிலையில் நாம் இயங்கியாக வேண்டும். கொள்கையை வாணிகமாக்குவது நம்மால் இயலாதது. இனி, இப்பொழுதுள்ள நிலையை வைத்துக்கொண்டு, வேறு எவரும் கூட இந்த அளவு செய்ய முடியாது. இதைப் பெருமைக்காகச் சொல்லவில்லை. இதிலுள்ள கடினத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே குறிப்பிடுகின்றேன்.

எனவே நாம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, (தமிழ்நிலம், இயக்கம் இரண்டிற்கும் வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.) இரண்டு இதழ்களையும் தடையின்றித் தொடர்ந்து, அஃதாவது என் காலத்திற்குப் பின்னும், வெளிக்கொணர வேண்டுமானால், முதலீட்டுப் பெருக்கமும் முயற்சிப் பெருக்கமும் உடனடியாகச் செய்தாக வேண்டும். எல்லாருமே அஃதாவது ஏற்கனவே கொள்ளை கொள்ளையாகத் திரட்டி வைத்திருப்பவர்களும், அது போல் ஒன்றுக்குமே வழியில்லாத உண்மையர்களும் கூட, பொருளுதவி தேவை, தேவை என்று பொதுமக்களை நச்சரிக்கின்றார்கள். இதைப் பார்த்து எப்பொழுதுமே வருந்திக் கொண்டிருப்பவன் நான். ஆனால் என்மேலும் சில பொருளியல் பழிகளும் குற்றங்களும் நயன்மையில்லாமலும், நன்றாக உணர்ந்து கொள்ளாமலும் சுமத்தப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்தும், சில தமிழீழ அன்பர்கள், தலைவர்களிடமிருந்தெல்லாம் உதவிகள் எனக்கு

வருவதாகச் சிலர் கூறிக்கொண்டிருப்பதை, அன்பர்கள் சிலர் வந்து என் காதுகளில் போடும்பொழுது, எனக்கு நகைப்புத்தான் வருகிறது. சினம் வருவதில்லை! எத்துணை அறியாமையில் நம் மக்கள் உள்ளனர்! எத்துணை இரங்கத்தக்கவர்கள்! உலகியலின் உண்மையை உணர்தல் எவ்வளவு கடினமானது! உண்மைகள் போலிகளாகவும், போலிகளே உண்மைகளாகவும் கருதப்படும் இந்த நிலையை நாம் எவ்வாறு உணர்த்துவது? எனவே அதுபற்றியெல்லாம் நான் என்றுமே கவலைப்படுபவனல்லன். அதைக் காலந்தான் உணர்த்தவேண்டும். அல்லது அதுவும் உணர்த்தாமல் தான் போகட்டும். அதைப்பற்றியும் எனக்குச் கவலையில்லை. எனக்குச் சரி என்று பட்டதை, உண்மையாகவும் நேர்மையாகவும், கடமை என்று கருதிச் செய்து கொண்டிருப்பதையே வாழ்க்கை என்று உயிர்த்து வருகின்றேன்.

இடும்பைக்கே கொள்கலன் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு (1029)
இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண் (615)

— என்னும் இரண்டு குறள் கருத்துகளும் என் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கின்றன. எனவே, கடமைக்குத் தகுந்த சூழலையும், இயலாதபொழுது சூழலுக்குத் தகுந்த கடமையையும் உருவாக்கிக் கொண்டு செயலாற்றி வருகின்றேன்.

இப் பின்புல உணர்வுகளுடன் கீழ்வரும் முடிவுகளை உங்கள் முன் வைக்கின்றேன். அவற்றின் விளைவைப் பொறுத்ததே உங்கள் விருப்பமும் என் முயற்சியும்.

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு-படிக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது இவ்விரண்டு இதழ்களும் தேவை என்று உணர்கின்ற ஒவ்வொருவரும், உடனடியாக ஆளுக்குப் பப்பத்து உறுப்பினர்களை (ஒவ்வொருவரும் அவ்வரர் படிக்கின்ற இதழ்க்கு)க் கட்டாயம் சேர்த்து உதவுதல் வேண்டும், பத்து உறுப்பினர்களை சேர்த்துத் தருபவருக்கு ஓராண்டு உறுப்பாண்மை இலவயமாக அளிக்கப்படும்.

2. 'தென்மொழி'க்கு வாணாள் உறுப்பினர் கட்டணம் உரு 200 தமிழ்ச்சிட்டுக்கு உரு: 120/-

பத்து உறுப்பினர்களைச் சேர்க்க இயலாதவர்கள் அவர்கள் படிக்கின்ற ஏதேனும் ஓரிதழ்க்கு ஐந்து வாணாள் உறுப்பினர் கட்டணங்களை வாங்கி அனுப்புதல் வேண்டும். அத்தகையவர்க்கும் ஓராண்டு உறுப்பாண்மை இலவயம்.

3. இத்துடன் தங்கள் ஊரில் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' வரவில்லையானால், அங்கு 10 இதழ்களை வாங்கி விற்குமாறு முறைப்படி முன்பணம் கட்டும் முகவர் ஒருவரை ஏற்பாடு செய்தல் வேண்டும்,

4. இவையன்றித் தாங்கள் இவற்றின் வளர்ச்சிக்கென விரும்பும் கணிசமான நன்கொடைகளைத்தரவும், இயன்றால் திரட்டி அனுப்பவும் வேண்டும். இந்நான்கு முயற்சிகளையும் தொடர்ந்து ஒரு மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் செய்து நிலையைச் சரி செய்தல் வேண்டும், போதுமான அளவு நிலை சரிசெய்யப்

தமிழருக் குலகினில் புகழ் சேர்ப்பேன்!

எத்தனை இழிவுகள் பழிகளைக் கூறினும்
  என்செயல் நடக்கும் விடமாட்டேன்!-ஒரு
சிந்தனைப் போலமுன் பின் உணர்ந் ததனல்
  சிறுஅள வதிர்ச்சியும் படமாட்டேன்!
பித்தனைப் போலவும் பேடியர் போலவும்
  பிதற்றுவார் தூற்றலுக் குளம் நடுங்கேன்!-ஒளி
முத்தனை தமிழில், இனத்தினில், நாட்டில்
  முழுவுளம் பதித்தேன்! வினைஒடுங்கேன்!

தனியனாய் நடப்பினும் தனிவழி போகினும்
  தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் நடைதளரேன்-மிகு
பனியினும் குளிரினும் வெயில்மழை சூழினும்
  பதுங்கிட மாட்டேன்; மனம் உலரேன்!
இனியராய்ப் பேசி இழிஞராய் மாறும்
  எத்தரை அணுகேன்; நிலைமாறேன்!-ஒரு
முனிவனாய் இருந்து முதுபொருள் உரைப்பேன்!
  முதுதமிழ்க் குழைப்பேன்; பழி கூறேன்!

உழைப்பவர் உழைப்பினுக் குறுதுணை யாவேன்!
  உலுத்தரை இடித்திடித் துரைதருவேன்!-பிழை
இழைப்பவர் எவரெனி னும்அவர் கடிவேன்!
  ஏழையர்க் குதவுவார்க் கிணை வருவேன்!
அழைப்பவர் அன்பினுக் கறிவினுக் கடியேன்!
  அதிகார ஆளுமைக் கடிபணியேன்!-நெறி
பிழைப்பவர் பிழையை நேருற உரைப்பேன்!
  பேதையர் பிழைகளை உடன்மறப்பேன்!

இந்தநூற் ருண்டில் இதுதலை முறையில்
  எந்தமிழ், இனம், நலம் தன்னுரிமை-பெற
வந்துழைத் திடுவார் எவரெனி னும் அவர்
  வருகையை வாழ்த்துவேன், வரவேற்பேன்!
வெந்துநீ ருயினும் தமிழ்மொழிக் கென்னுயிர்,
  விறகுடல் தருவேன்! பொருள் தோற்பேன்!-பலி
தந்தினம் மீட்பேன்! விடுதலை பெறுவேன்!
  தமிழருக் குலகினில் புகழ் சேர்ப்பேன்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

படாத பொழுது நாம் என்ன செய்வது? எனவே முடிவை அந்த விளைவுக்கே விட்டுவிடுவோம். இவ்வகையில் ஈடுபடுபவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து இதழ்களில் வெளியிடப் பெறும். அதைக் கொண்டு மற்றவர்கள் யார் என்பதை பிறர் இனங் கண்டு கொள்ள முடியும் அன்றோ? பிறபின்.

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். (976)



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ௫௫

அண்ணா மலைசெய் பல்கலைக் கழகத்து
உண்ணில் போக்கிய இளையோர் அண்மி
தெருவலம் வந்து சூளுரை முழக்கி
ஒள்ளிய கொள்கை சுவர்தொறும் வரைந்து
மைநிற நெடுங்கொடி பன்மனை தூக்கி
நெடுந்தொடர் வண்டித் தடம்படுத் திருந்து
கல்லாப் புலமொழி கற்கெனத் தூண்டிய
ஒல்லாப் பேதையர் அரசு கடிந்து
காவல் மாடத்து ஏவல் பணிந்து
வல்சிறை போகி மெய்யடி பட்டு
நெருப்புரை யாற்றி உறுப்பறை போகிய
தடந்தோள் மாணவர்க் குள்ளுயிர் கீண்ட
தாழா நல்லிசைத் தமிழே
வாழிய நெடுநீர் வையநாள் வரையே!

பொழிப்புரை :

அண்ணாமலையார் உருவாக்கிய பல்கலைக்கழகத்தின் (உணவு விடுதியிலிருந்து ஏற்பட்ட கலவரத்தின் பொருட்டாய்) வெளியேற்றப்பட்ட இளைஞர்கள் யாவரும் ஒன்று கூடித் தெருத் தெருவாய் ஊர்வலம் வந்தும், (இந்தியை நுழைய விடமாட்டோம் எனப் பலவாகிய) உறுதி உரைகளை முழக்கியும், தெளிவான அறிவு சான்ற கொள்கை மொழிகளை ஆங்காங்குள்ள சுவர்கள் தோறும் வரைந்தும், நீண்ட கறுப்புநிறக் கொடிகளைப் பல வீடுகளில் ஏற்றி நிறுத்தியும், நெடிய தொடர்வண்டித் தடங்களில் படுத்து, வண்டிகளைத் தடுத்தும், கல்விச் சிறப்பில்லாத புல்லிய மொழியாகிய இந்தியைக் கற்றுக் கொள்ளத் தூண்டிய, அதைத் தடுத்து நிறுத்தவியலாத பேதைமை சான்றவரின் அரசமைப்பைக் கடிந்தும், காவல் நிலையங்களில் உள்ள காவலர்களின் கட்டளைப்படி பணிந்தும், சிறைப்பட்டும், உடல் வருந்த அடிபட்டும், நெருப்புப் போலும் கொதிப்பான உரைகளைக் கூறியும், உடல் உறுப்புகள் தாக்கப்பட்டதால் ஊறுபட்டும், நின்ற பருத்த தோள்களை உடைய மாணவர்களுக்கு, அத்தகைய வீர உணர்வு பெறுமாறு உள்ளுயிரைக் கிளர்ச்சியுறச்செய்த, தாழ்ச்சியுறாத நல்ல புகழை உடைய தமிழ்மொழியே, நீ வையமானது இருக்கின்ற நாள்வரை இருந்து வாழ்வாயாக!

விரிப்பு : இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது:

கல்லாப் புலமொழி இந்தியை எதிர்த்து நின்ற செல்லா

Scanned with CamScanner

நல்லிசை மாணவர் தமக்கு உள்ளுணர்வு கீண்டிய தமிழை வாழ்த்திப் பாடியது, இது.

"இந்தி நுழைப்பால், தமிழ் உணர்வு கொளுத்தப்பெற்ற அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து மாணவர்கள், கலவரத்தின் காரணமாக உணவு விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னை, அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, ஆங்கிருந்து தெருத் தெருவாய் இந்தியை எதிர்த்து முழக்கமிட்டுக் கொண்டு, ஊர்வலம் சென்றும், இந்தியை எதிர்க்கின்ற கொள்கை வரிகளை ஆங்காங் குள்ள சுவர்கள் தொறும் எழுதியும், நீண்ட கறுப்புக் கொடிகளைப் பல வீடுகளில் ஏற்றியும், தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டி, ஆங்குள்ள நீண்ட தொடர்வண்டிகளைத் தடுத்து நிறுத் தியும், கல்விச் சிறப்பில்லாத புல்லிய இந்திமொழியைக் கற்கத் தூண்டிய அறிவற்ற அரசு ஆளுமையைக் கடிந்தும், அவற்ருல், காவலர்களின் பிடிக்குள்ளாகிச் சிறைப்பட்டும், அவர்களால் உடல் உறுப்புகள் ஊறு படுமாறு அடிபட்டும், அக்காலும் அடங்காமல், நெருப்புப் போலும் சுடுகின்ற சொலவகங்களைக் கூறியும் நின்ற, பருத்த தோள்களை உடைய மாணவர்களுக்கு, அவர்கள் அத்துணை வீர உணர்வு பெறுமாறு, அவர்களின் உள்ளுயிரைக் கிளர்ச்சியுறத் தூண்டிய, தாழ்ச்சியுருத நல்ல புகழையுடைய தமிழ் மொழியே, நீ, உலகம் உள்ளளவும் நின்று வாழ்வாயாக" என வாழ்த்தியதாகும் இப் பாடல்.

அண்ணுமலை செய் பல்கலைக் கழகத்து : கல்வி வள்ளல் அண்ணு மலையால் கட்டுவிக்கப் பெற்ற பல்கலைக் கழகத்தின்.
உண்ணில் போக்கிய: உண்ணுகின்ற இல்லமாகிய உணவு விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட.
இளையோர் : இளமை பொருந்திய மாணவர்கள்.
அண்மி : ஒன்றுகூடி.
தெருவலம் வந்து: தெருக்கள் தோறும் ஊர்வலம் வந்து.
சூளுரை முழக்கி: கொள்கை உறுதிகளை உரக்க ஒலித்து.
ஒள்ளிய கொள்கை: தெளிந்த அறிவார்ந்த கொள்கை மொழிகளை.
மைநிற நெடுங்கொடி: கறுப்பு நிறமுடைய நீண்ட கொடி.
பன்மனை தூக்கி: பல வீடுகளிலும் தூக்கி நிறுத்தி.
கல்லாப் புலைமொழி: கல்விச் சிறப்பில்லாத புன்மை சான்ற மொழி — இழிந்தமொழி-இந்திமொழி.
கற்கெனத்தூண்டிய : கற்றுக் கொள்ளுங்கள் எனத் தூண்டிய.
ஒல்லாதப் பேதையர் : இந்தி நுழைவைத் தடுத்து நிறுத்த வியலாத பேதைமை சான்றவர்.
அரசு கடிந்து: அரசைக் கடிந்து.
காவல் மாடம்: காவல் நிலையம்.
ஏவல் பணிந்து: கட்டளைக்குப் பணிந்து.
வல்சிறை போகி: வலிந்த சிறைகளுக்குள் அடைக்கப்பட்டு.
மெய்யடி பட்டு: உடல் வருந்த அடிபட்டு.

நெருப்புரை: கொதிக்கின்ற உணர்வுரை.
உறுப்பறை போகிய: உடல் உறுப்புச் சிதைவு ஏற்பட்ட.
உள்ளுயிர் கீண்ட: உள்ளுயிரில் தோய்ந்திருந்த தமிழுணர்வைக் கிளர்ச்சியுறச் செய்த.
தாழா நல்லிசைத் தமிழ்: என்றும் எதிலும் தாழ்ச்சியுறாத சிறந்த புகழ்பெற்ற தமிழ்மொழி.
நெடுநீர் வையம்: நீண்ட கடலையுடைய உலகம். வண்டிபோல் சுழன்று ஓடுவதால் உலகை வையம் என்றனர்.
வையநாள் வரை: உலகம் நிலைத்திருக்கின்ற நாள் வரைக்கும்.

வட அரசு தென்மாநிலங்களின் மேல் கட்டாயமாகத் திணிக்கின்ற இந்தி என்னும் கல்விச் சிறப்பற்ற புல்லிய மொழியை எதிர்க்கத் திறமையற்ற மாநில அரசு, அதைக் கற்குமாறு மாணவர்களைத் தூண்டியதும், அதால் வெறுப்புற்று மனக் கொதிப்படைந்த மாணவர் பலரும் குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக் கல்வி பயின்ற மாணவர்கள் பலரும், போராட்டம் நிகழ்த்திய முறைமையைக் கூறி, அவ்வுணர்வெழுச்சிக்குக் காரணமாயமைந்த தமிழ் மொழியை வாழ்த்திக் கூறியதாகும் இப்பாடல்.

இப்பாடல் முன்னது திணையும், முதுமொழி வாழ்த்து என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன. O

பேரா(சை)யாசிரியரின்
காட்டிக் கொடுக்கும் கயமைக் குணம்!

ஐரோப்பிய வழி(பழி)த் துணைப் பேரா(சை)யாசிரியர் தம் உள்ள அழுக்கை இன்னும் நீக்கிக் கொள்ளவில்லை போல் தெரிகிறது. முள்மரமாக வளர்ந்துள்ள அவர், அண்மையில் 'தமிழ் நிலத்'தில் அவரின் குறும்புத் தொடர்பாக மடல் எழுதியிருந்த திரு.பனிமலைப் பதியன் என்னும் தூய தென்மொழி அன்பருக்குப் பலவகையானும் தொல்லை கொடுத்து வருவதாக அறிகிறோம்.

திரு. பனிமலைப் பதியன், தாளாலை ஒன்றில் பொறுப்பான பணியாற்றுபவர். அவருடைய மேலாளர் ஒரு பார்ப்பன அதிகாரி. அவருக்கு நம் அகராதி(!)ப்பேராசிரியர், பனிமலைப் பதியன் ஒரு 'பிராமண துவேசி' என்றும், அவரால் ஆளுமைக்குக் கேடுகள் வருமென்றும், அவரை பணியில் வைத்திருக்கக் கூடாதென்றும் இன்னும் பலவகையாகவும் 'கோளுரை' எழுதி அனுப்பியிருப்பதுடன், அவர்மேல் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வேண்டியுள்ளதாகத் தெரிகிறது.

அகராதி(!)ப் பேராசிரியர் இன்னும் அடங்காமை மேற்கொள்வாரானல், அவர் எதிர்காலம் ஆரிருளில் அவரை உய்த்து விடுமோ என்று இரங்கியும், அவர்மேல் முறைப்படி வழக்குத் தொடர்ந்துள்ளதால் இதற்குமேல் எழுதுதல் தேவையன்று என்று கருதியும் இக்குறிப்புடன் ஓர் எச்சரிக்கையாக நிறுத்திக் கொள்கிறோம்.

பிறமொழிச்சொற்கள் என்று தவறாகக் கருதப்படும் பண்பாழ அகல் உயர்ச்சி வாய்ந்த தமிழ்ச்சொற்கள் -- க

— பன்மொழிப்புலவர்: கா. அப்பாத்துரையார். க.மு.

மாந்தன் இனம் எவ்வளவு பழமையானதோ, அவ்வளவு பழமையான மொழி தமிழ்! அதனைவிடப் பழமையானது என்று கூடக்கூற இடமுண்டு. இதுமட்டுமன்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே, தமிழினம் மாந்தரின நாகரிகப் பண்பாடுகளிலும் கருத்து நயங்களிலும், வியத்தக்க ஆழ அகல உயர்ச்சிகளை எட்டியிருந்தது. இவற்றைத் தமிழ்ச்சொற்கள் பலவும் காட்டுகின்றன. இவற்றை ஆய்ந்து உணர்ந்து கொள்வது இன்றைய தமிழுலகத்தின் இன்றியமையாத் தேவை ஆகும். ஏனெனில் இவற்றுள் சில, பலவற்றை நாம் இழந்திருக்கிறோம், இழந்து வருகிறோம். இது தடுக்கப்பட வேண்டும். தடுக்கப்படாவிட்டால், அதனால் வரும் இழப்பு தமிழினத்துக்கு மட்டுமன்று, மாந்த இன நாகரிகத்திற்கேயுரிய ஒரு பேரிழப்பு ஆகிவிடும்.

முதலாவதாக, இத்தகைய சீரிய சொற்கள் பிற மொழி சென்று இயல்பான வடிவிலோ, திரிந்தோ வழங்குவதனால், தனித்தமிழாளர் அவற்றை முற்றிலும் விலக்கிவிடும் ஒரிடர் ஏற்பட்டுள்ளது. இரண்டாவதாக, இவற்றினிடமாகத் தனித்தமிழர் மேற்கொள்ளும் பிற தனித் தமிழ்ச்சொற்கள் பலவற்றின் பண்புயர்வு மிக்க பழம் பொருள்கள் மறக்கப்பட்டு, பொருள் இழிவு (depreciation of word import) ஏற்பட நேர்கிறது. மூன்றாவதாக, சொற்கள் சொற்களாக மட்டும் இழக்கப்படவில்லை. சொல்லிலடங்கியுள்ள தமிழினத்தின் தனிச்சமயப் பண்புகள், தனிப்பண்பாட்டு நயங்கள் ஆகியவையும் மெல்ல மெல்ல மறக்கப்பட்டு, கருத்திழிவும் பண்பிழிவும் தோன்றி விடுகின்றன. தமிழினப் பண்பாடு உணரப் படாநிலையில் அயலினப் பண்பாடுகளே தமிழினப் பண்பாடுகளாக மயங்கப்படுகின்றன.

பல மொழிகளின் கலப்படத்தால் ஏற்பட்ட மற்ற மொழிச் சொற்களைப் போலன்றி, தமிழ்ச்சொற்கள் சொற்குடும்பங்களாக, சொற்குடும்பக் குழுக்களாக விரிந்து மலர்ச்சியுற்று வருவதனால், பாசம், சங்கம், வேதம், சாத்திரம், புத்தகம், பாதம், கோபுரம் போன்ற குழுமையச் சொற்களைச் சுற்றியே நாம் இவற்றை ஆராய்தல் நலம் பயப்பதாகும்.

[க] பாசம்

பாசம் என்ற சொல் பசுமை என்பதனடியாகத் தோன்றியது. பச்சைநிறம், பச்சைநிறச் செடிகொடிகளின் மென்மை, அவற்றின்

உயிர்ச்சாற்றின் இயல்பானபசைப்பண்பு, உயிரின் பசைப்பண்பான அன்பு, உயிர்க்குழுவாகிய மன்பதை அல்லது குமுகாய வாழ்வுக் குரிய தொடர்புறவுக் கடமை கட்டுப்பாடு, அதனால் ஏற்படும் மென்பண்பாகிய பண்பிணைவு, பொறுமை, அமைதி ஆகிய பொருள் விரிவுகளால் பசுமை, பசை, பாசி, பாசம், பசு. பொறுமை வாய்ந்த ஆவினம், உயிர்) என்ற சொல்மலர்ச்சிகள், பொருள் மலர்ச்சிகள், பண்பு மலர்ச்சிகள் எழுகின்றன.

சமக்கிருதத்தில் பாசம் என்ற சொல்லுக்குக்கட்டு என்ற ஒரு பொருள்தான் உண்டு. அதுவும் அன்பிணைவாலான கட்டுப்பாடு என்ற உயர் பொருள் இழந்து காலகட்டு, கைக்கட்டு அஃதாவது அறியாமையின் கட்டு என்ற பண்பிழிவுடைய பொருளிலேயே வழங்குகிறது. தமிழிலோ அஃது உயிர்ப்பசையாகிய அன்பு என அன்பிணைப்புக்குரிய அல்லது கடமை கட்டுப்பாட்டுக்குரிய அடிப் படைப்பண்பும் உணர்த்துகிறது.

சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் களில் பாசம், பசு ஆகிய இருசொற்களும் இவ்வாறு தொடர்புடை யன ஆகின்றன. சமக்கிருதத்தில் இத்தொடர்பு கிடையாது. அன்புப் பாசத்தை உடையதாக உயிர் அல்லது ஆன்மாவை அம்மொழி வாணர் கருதவில்லை; அறியாமை மாயையில் கட்டுண்டது என்று மட்டுமே கருதுவர்.

பதி பசு பாசம் என்ற முப்பொருளில் நடுவணதாகிய பசு (ஆன்மா அல்லது உயிர்) இருவகைப்பசை அல்லது பற்றுகளுக்கு உரியது,ஒன்று. உயிர்மலர்ச்சி (Life-Evolution), பண்பு மலர்ச்சி (Culture-Evolution) ஆகியவற்றில் அதனைக் கீழ்நோக்கி அதாவது பின்னோக்கி கீழே இழுப்பது, இது தன்னலம், தன்முனைப்பு, தன் அவா அடிப்படையானது. மற்றது மலர்ச்சியின் இலக் குத்திசையில், அஃதாவது மேல்நோக்கி அதனை இழுப்பது, தூக்குவது, உயர்த்துவது, இஃது அன்பு, அருள் நோக்கியது. இந்த இருவகைப்பசை அல்லது பற்றுகளையே சார்பு என்ற ஒரே சொல்லாய் இருவகைச் சார்புகளாக மெய்ம்மறை அருளிய தெய்வத் திருவள்ளுவர் சுட்டியுள்ளார்.

> சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்
> சார்தரா சார்தரு நோய். (குறட்பா-359).

இக்குறட்பாவில் சார்பு கெட என்பதிலும், சார்தருநோய் என்பதிலும் சார்பு என்ற சொல் அன்பு-அருள் இலக்கு வடிவான பதிக்கு எதிர்திசை நோக்கிய பற்று ஆகும். ஆனால் இதே குறட் பாவில் சார்புணர்ந்து என்பதில் சார்பு என்பது பதி அல்லது மலர்ச்சி இலக்கின் திசையில் உயிரைச் செலுத்தும் பசை அல்லது பற்று ஆகும்.

Scanned with CamScanner

பாசம் அல்லது பாசி என்பது சறுக்கி விடுகின்ற, வீழ்த்துகின்ற பசை ஆகும். அதனை உயிர்களின் உடல் சார்ந்த, உடல் வாழ்வு சார்ந்த கீழ்ப்படிக்குரிய பசை என்னலாம். இவ்வாறு சறுக்காமல் பதி அல்லது இலக்கில் சென்று ஒட்டிப் பதியும்படி மேல்நோக்கி இழுக்கும் பதி நோக்கிய உயிர்ப்பசை, உயிர்வாழ்வு (ஆன்மவாழ்வு) சார்ந்த பசை ஒன்று உண்டு. அன்பு அருள்வாய்ந்த பற்று அல்லது காதல் பற்றே (பத்திமையே) அது. கீழேசறுக்காமல் தடுத்து நிறுத்தி அது மேல் நோக்க வைக்கிறது. சறுக்காமல் கால் ஊன்றப் பதிய வைத்துத் தடுப்பதனுடன் இலக்கில் சென்று புதிய உதவுவதனுலேயே இறைமை அல்லது இலக்கும் பண்பு பதி எனப்பட்டது.

இவ்வாறு தமிழில் பதி, பசு, பாசம் ஆகிய மூப்பொருட் பெயர்களுமே தொடர்புடையவையாய் இருக்க, சமக்கிருத மொழி அவற்றிடையே எத்தகையத் தொடர்பும் காட்டவில்லை. அவற்றின் பொருளையும் பண்பையும் அஃது இழிவுறுத்தி விடுகிறது.

இதுமட்டுமன்று, இத்தமிழ்த் தொடர்பு தமிழரின் உண்மையான, பழமையான கடவுள் நெறியின் தன்மை காட்டுகிறது. சமசுக்கிருதமொழி சென்றபின் இச்சொற்கள் பண்பில் இழிந்து தவருன வழியில் தொல்பழந் தமிழ்ச் சைவ சித்தாந்தப் பண்பைத் திருப்பி விட்டுள்ளது. என்றென்றும் முன்னேக்கி வளரும் மாந்தர் வாழ்வின் குறிக்கோள் உருவம் இறைவன் என்பது பழந்தமிழரின், திருவள்ளுவர் காலத் தமிழரின் சமய நெறிக் கோட்பாடு. ஆனுல் இன்றைய, சமய நெறியோ மாந்தர் வாழ்வை ஒரு வேண்டாக் கலியன், மாயப்பொய்மை, துன்பச்சிறை எனக்கொண்டு, அதனின்று ஓடி ஒளிகிற, விடுபட்டு ஒழிகிற இடம்தான் கடவுள் என்ற அழுகைவேதார் தந்தையே மேற்கொண்டுள்ளது; மேற்கொண்டு வருகிறது.

அன்பும் அருளும் சார்ந்த பசை சென்று ஒட்டும் இடமே பதி அல்லது இறை. இறை அருள் பிறங்கும் இலக்கிடமும். இதனுல் பதி, திருப்பதி எனப்பட்டது. அதுபாடும் தேவாரப்பாடல் தொகுதியும் திருப்பதியம், பதியம் அல்லது பதிகம் எனப்பட்டது.

ஏறத்தாழப் பத்துப்பாட்டு அமைந்ததே பதிகம் என இன்று கொள்ளப்படுகிறது. இதுவும் தவறன்று. பதின்மான முறை (Decimal System) தோற்றுவித்த தமிழர், இறைமை எண் அல்லது ஈறிலி எண் (Infinity) நோக்கிய பேரெண்களின் பதின்மையின் தான எண்களின் அல்லது அடிப்படைத் தொடக்கத்திலேயே பற்று அல்லது பதிவு என்ற முறையில் அதற்குப் பத்து என்று பெயரிட்டனர்.

Scanned with CamScanner

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனர்.

அலித்தன்மைக்கு மருத்துவம்

அலித்தன்மை எவ்வகைப் பட்டதாயினும் சரியே, மன மருத்துவம் ஒரு தனி இடத்தைப் பெறுகின்றது என மருத்துவ வல்லுநர்கள் நினைக்கின்றனர். சிலர் அலித்தன்மைக்கு மனமே முழுக்கக் காரணம் என நினைக்கின்றனர். ஆகவே அவர்கள் மன மருத்துவத்திலேயே தங்கள் முழு நாட்டத்தையும் செலுத்துகின்றனா. அலித்தன்மைக்கு மனம் எவ்வகையிலும் காரணமன்று என நினைப்பவர்கள் கூட, மனமருத்துவத்தால் பெறும் நன்மையை மறுக்க இயலாது. உறுப்பு அடிப்படையிலேயே அலித்தன்மை வந்ததாக இருக்கட்டும். அந்த அலித்தன்மை

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்றும் வளரும் முடிவற்ற ஈறிலி இலக்குக இறை. அத் தொலை இலக்குநோக்கிய வழி இலக்குகள் (targets) பல. ஈறிலி இலக்கு காண்டற்கரிது. மிக வண்மையான வழி இலக்கே காணற்குரியது என்ற முறையிலேயே திருவள்ளுவரும் பண்டைப் பண்டைத்தமிழர்,பண்டைப் புத்தசமணர், பண்டைச் சினசப்பானியர் ஆகியோரும் இறைவன் அடி அல்லது தாளையே வணங்கினர் (மணிமேகலையின் புத்தபீடிகை இதுவே)

இறையன்பரைத் தமிழர் அடியார் என்றனர். தொண்டர் தலை (இலக்கு) இறைவனின் அடி என்பது இன்றும் தமிழ் வைணவக்கோயில் வழக்காற்றின் மரபு (சடகோபம் சாத்தல்) ஆகும்.

சமக்கிருத வாகை ஆதிசங்கரர் காலத்தில்தான் அடிகள் என்பதனை (பாதா என) வழங்கினர். ஆனல் சமசுக்கிருத இலக்கண மரபின்படி அஃது இருமைஎண் என்பது மறந்து பன்மை யாக்கியதன்மூலம் அவர்கள் அதன் மூலத்தமிழ மரபை வெளிக் காட்டியுள்ளனர்.

கால் பதியும் இடமே பாதம்.

இவ்வாறு பாசம், பசுமை, பாசி, பசு, பதி, பாதம் ஆகிய சொற்களும் அவை சூழ்ந்த பல்வேறு சொற்களும், பொருள்களும் தமிழளாவ, தமிழர்பண்புகளையறிவளாவ, தமிழர் சமயமளாவ விரிவுறக் காண்கிறோம்,

(பிறசொற்கள் தொடரும்)

Scanned with CamScanner

உடையவர் புணர முயலும் ஒவ்வொரு முறையும் தோல்வியே அடைகிறார். அத்தோலவியால் அவர் மனம்படும் பாட்டை யாரே விளக்க வல்லார்! இம்மனக்கசப்பே தம் பேரில் உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கிறது. அதனால் நரம்புத் தளர்ச்சி அடைகிறது. மறுபடியும் தன்னம்பிக்கையை உண்டாக்க வேண்டும் மன மருத்துவம் வேண்டற்பாலது தானே. இங்கு மனமருத்துவம் இல்லாது எப்படி மருத்துவம் முற்றுப்பெற முடியும். ஆகவே எவ்வகையான அலித்தன்மையாயினும் சரியே, மனமருத்துவம் இன்றியமையாத தாகும்.

மனமருத்துவம் முழுவதையும், நோயாளி, தமக்குத் தாமே செய்து கொள்ள இயலாது. அதற்குத் திறமையும், பழக்கமும் உள்ள மருத்துவர் உதவி வேண்டற்பாலது. இந்த வழிகள் மூலமாக இந்நோய் நீங்கும் என்றும், அதற்கு வேண்டிய ஊக்கம் கொடுக்கக் கூடிய விளக்கம் கொடுத்தலும் நோயாளி தமக்குத்தாமே உறுதி யாகச் செய்து கொள்ள இயலேவே இயலாது. நோயாளி, மனமருத்துவர் பேரில் முழுநம்பிக்கை வைத்து அவர் கூறுவனவற்றுள் ஒன்றுகூட விடாது, அப்படியே கைக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மருத்துவம் வெற்றியடைய வழி உண்டாகும். மன மருத்துவத்தில் கைக் கொள்ள வேண்டிய சில பொது நெறிகளை இங்கு சிறிது விளக்குவோம் :

அலித்தன்மை நீங்க மன மருத்துவ நெறிகள் இவைதாம் என அறுதியிட்டுக் கூறுதல் எளிதன்று. ஒரு குறிப்பிட்ட நோயாளியை ஆராய்ந்து; அவருக்குச் செய்யப்பட வேண்டிய மன மருத்துவம் இதுதான் என உறுதி செய்யப்பட்டாலும்கூட, மனமருத்துவம் செய்வதில் பாதிக்கிணறுதான் தாண்டியவர்கள் ஆவோம். அலித்தன்மை அல்லாத பிற நோய்களுக்கு, நோயின் தன்மை, அதற்குரிய மருத்துவம், மருந்தைக் கொடுக்கும் வகை ஆகியவற்றை அறிந்தால் போதும். அவ்வாறே செய்தால் நோய் ஐயத்திற்கு இடமின்றி உறுதியாக நீங்கிவிடும். அலித்தன்மைக்கு, மன மருத்துவ வழிகள் இவைதாம் என உறுதி செய்த பின்னும், அவற்றைக் கையாளுவதில், திறமையும், ஓர்தலும், ஆய்வுத் திறனும், பழக்கமும் மிகமிக வேண்டற்பாலனவை. உள நூலுக்கு உரிய வழிகளை முழுமையும் அறியாத ஒரு மருத்துவருக்கு, மிகுந்த பொதுஅறிவும், மாந்தத் தன்மையும், இளகிய மனமும், நோயாளியின் மனத்தில் நம்பிக்கையை ஊட்டவல்ல திறமையும் இருக்குமானால், அம் மருத்துவர், இரக்கமற்ற, மாந்தத்தன்மை இல்லாத, சிடு சிடுத்த, உள நூலிலேயே புரண்டு புரண்டு எழுந்த மருத்துவரை விட அலித்தன்மைக்கு மருத்துவம் செய்ய மிக மிகத் தகுதி உடையவர் ஆவர். நோயாளி ஒருவருக்கு ஒருவகையான மருத்துவம் வெற்றியைத் தந்ததாகக் கொள்வோம், அந்நோயாளிக்

கிருந்த நோய்க் குறிகள் போன்றே மற்றொருவருக்கு இருப்பதாகக் கொள்வோம். முன் நோயாளிக்குச் செய்த மருத்துவம் இந்த நோயாளிக்குப் பயன்தருவதில்லை மன அலித்தன்மையைப் பொருத்தமட்டில், நோயாளிகள் இருவர் ஒரேவகையாக இருக்க இயலாது, முடியாது. ஆகவே மருத்துவர், நோயாளி ஒவ்வொருவரையும், ஒவ்வொரு புதுவகையான நோய் கண்டவராகக் கொண்டு மருத்துவம் செய்ய வேண்டி இருக்கிறது.

மருத்துவர், நோயாளிக்குத் தன்பேரில் முழு நம்பிக்கை ஏற்படும்படி செய்ய வேண்டும். இதுவே முதல் முதல் செய்யப்பட வேண்டிய தலையாய வேலையாகும். நோயாளியை ஆராயும் பொழுது மிகமிக உன்னிப்பாக நடந்து கொள்ள வேண்டும். நோய்வரக் காரணம் யாது? நோயினால் உண்டான குறைகள் யாவை? நோயைப்பற்றி நோயாளி நினைப்பது என்ன? என்பவற்றைப் பற்றி, மருத்துவர் மிகத் திறமையான கேள்விகள் கேட்டே, நோயாளியின் வாயின் மூலமாகவே அறிய வேண்டும். மன அலித்தன்மையில் கலவி உறுப்புகளிலோ அல்லது உடலிலோ எவ்வகைக் குறைபாடும் தென்படாது. ஆனால் மற்ற வகை அலித்தன்மைகளில், கலவி உறுப்புகளிலோ அல்லது அவற்றைச் சுற்றியோ உறுதியாகக் குறைகளைக் காணலாம். எடுத்த எடுப்பிலேயே மருத்துவர், நோயாளியை நோக்கித் 'தங்களுக்கு எவ்வகைக் குற்றமும் இல்லை. நன்றாக இருக்கின்றீர்கள்' என்று சொல்லுதல் கூடாது. ஏன் எனில் நோயாளியின் மனக் குறளியின் அச்சுறுத்தலால் இந்த அலித்தன்மை ஏற்பட்டிருக்கலாம். மருத்துவர் அவ்வாறு சொன்ன உடனேயே நோயாளிக்கு மருத்துவர் பேரில் இருந்த நம்பிக்கை அற்று விடுகிறது. அதன்பின் செய்யப்படும் மருத்துவம் எல்லாம் பாழ், பாழேதான்! நோயாளிக்கு உண்மை நிலையை அறிவிக்க வேண்டியதுதான். ஆனால் அதைக்கூற மிகத்திறமை வேண்டும். கலவி முறையைப்பற்றி கொஞ்சம் கொஞ்சமாக மிக விழிப்புடன் விளக்கம் கூற வேண்டும். ஏன் எனில் மூளையில் உள்ள கலவி நடுவங்கள் நமக்குத் தெரியாமலேயே குறுக்கிடக் கூடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நோயின் உண்மைக்காரணம் எதுவாக வேண்டுமானால் இருக்கட்டும்நோயாளி தன்நோய்தீர,மருந்தோ,முறையோ இதுதான்எனச் சுட்டிக்காட்டினால் சுட்டிக் காட்டப்பட்டதிலிருந்து மருத்துவத்தைத் தொடங்குவதுதான் வெற்றிக்கு அடிப்படையாகும். எடுத்துக் காட்டாக, நோயாளி, ஒரு குறிப்பிட்ட மருந்து அல்லது முறை தான் தன் நோயை நீக்க வல்லது, என நினைக்கிறார் எனக் கொள்வோம். உண்மையில் மருத்துவர் செய்யப் போவது மன அலித்தன்மைக்கு உள்ள மருத்துவம்தான். இருப்பினும், நோயாளி

குறிப்பிட்ட மருந்திலிருந்தோ, அல்லது முறையிலிருந்தோ தான் மருத்துவம் செய்ய முனைய வேண்டும். அப்பொழுதுதான் நோயாளிக்கு மருத்துவர் பேரில் நம்பிக்கை ஏற்படும். அதுவே மன மருத்துவத்திற்கு அடிக்கல். கோளாறு ஒன்றுமில்லை என நன்கு தெரிந்தால் கூட நோயாளியின் உடலை முழுக்க நன்ருக ஆராய வேண்டும். இச் செய்கை மருத்துவரின் பேரில் நோயாளிக்கு நம்பிக்கையை ஊட்டும். சிறுநீர்ப் புறவழி நோக்கிக் கருவியின் மூலமாக ஆராய்தல் வேண்டற்பாலதன்று என மருத்துவர் நினைப்பினும் கூட, அக்கருவி கொண்டு ஆராயின், நோயாளிக்கு மருத்துவரின் பேரில் உள்ள பிடிப்பு வலுப்பெறுகின்றது. ஆகவே மருத்துவம் நோயாளியின் நோக்கின் அடிப்படையிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். மன அலித்தன்மை உடையவர்களிடம் உறுப்பு அலித்தன்மையும் காணப்படலாம். அப்பொழுது மன அலித்தன்மைக்கும், உறுப்பு அலித்தன்மைக்கும் சேர்த்தே மருத்துவம் செய்யப்பட வேண்டும். மன அலித்தன்மைக்குக் காரணங்களை நுணுகி ஆராயின் ஏதோ ஒருவகையான அச்சம் தான் என்பது தெட்டெனத் தெளிவாகும். அச்சத்தின் அடிப்படைக் காரணம் என்ன? அதன் தன்மை என்ன? என்பனவற்றை அறிதல் தான் மருத்துவரின் முதல் வேலையாகும். தொடக்கத்தில் இவை பற்றி அறிய வாய்ப்பே ஏற்படாதிருக்கலாம். நோயாளியைக் கூச்சமின்றித் தம் நோய்பற்றியும், தம் இயலாமை பற்றியும் பேச ஊக்க வேண்டும். அப்பேச்சிலிருந்தும், திறமையான வினுக்களின் மூலமாகவும், மருத்துவர், நோயின் தன்மை பற்றி ஒரு முடிவுக்கு வர வேண்டும். நோயாளி எதைப்பற்றி மிகுதியாகப் பேசுகிருர் என்பதை உன்னிப்பாக நோக்கி, நோயின் அடிப்படையைக் கண்டு பிடிக்க வேண்டும். அடிப்படைக் காரணங்களுக்கு எடுத்துக் காட்டாக, மனைவியின் வெறுப்பு, புணரும் பொழுது பிறர் பார்த்து விடுவார்களோ என்ற அச்சம், குழந்தை ஏற்படுமோ என்ற அச்சம், தொற்றுநோய் பற்றிக் கொள்ளுமோ என்ற ஐயம் போன்றவற்றைக் கூறலாம். (தொடரும்)

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

உ. த. மு. க.

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

1. வரும் தி.பி. 2015 விடை 8 (21-5-1984) முதல் விடை 17 (30-5-84) முடிய, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தன் தொண்டர்களுக்கென முதல் பயிற்சி வகுப்பை, மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், அணைப்பட்டி என்னும் ஊரில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

2. மேற் கூறப்பெற்ற 10 நாள்களிலும், சிறந்த தலைப்புகளில் 30 பயிற்சி வகுப்புகளும், கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் 3 சிறப்புரைகளும், 5 கலந்துரையாடல்களும், 2 இசை நிகழ்ச்சிகளும் 1 நாடகமும், பின்காணும் அட்டவணைப்படி நடைபெறும்.

3. பயிற்சி நடைபெறும் ஊரும் இடமும் மிகச்சிறந்த இயற்கைச் சூழலிலும் வையை ஆற்றங்கரையிலும் நடைபெறும். பயிற்சி பெறுவோர்க்கு உணவும் உறையுளும் இல்வயம்; எனினும் பயிற்சிக்கு ஆகும் செலவுகளை ஈடுகட்ட பயிற்சி பெறவிரும்புவோரிடமிருந்து உருபா 50 மட்டும் பயிற்சிக் கட்டணமாகத் தண்டப் பெறுகிறது: கட்டணம் செலுத்திப்பதிந்து கொள்ளாதவர்கள் வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப் பெறமாட்டார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய பயிற்சியாளர்களே சேர்க்கப் பெறுவதால் பதிவுக்கு முந்துக:

4. வகுப்பில் நடத்தப் பெறும் உரைகளைக் கேட்க விரும்பும் பொதுமக்களும் பார்வையாளர்களும் ஒவ்வொருநாளும் நடைபெறவிருக்கும் அனைத்து வகுப்புகளுக்கும் உரு2மேனி பார்வைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இசை நிகழ்ச்சிகளுக்கும், நாடகத்திற்கும் பார்வையாளர்கள் நிகழ்ச்சி ஒன்றுக்குத் தனிக் கட்டணமாக உருபா 2 செலுத்துதல் வேண்டும். பயிற்சிக் கட்டணம் செலுத்திப் பதிந்து கொண்ட மாணவர்களுக்கு எந்தத் தனிக் கட்டணமும் தண்டப்பெற மாட்டாது:

5. பயிற்சிக்கு வர விரும்பும் தொண்டர்கள், அனைத்து முன்னேற்பாடுகளுக்கும் உகந்த வகையில், தம் விருப்பு இசைவையும், கட்டணம் உருபா 50-ஐயும் 15-4-84 குள் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பித் தரல் வேண்டும். அதற்குப் பின் வரும் கட்டணங்களும், விருப்பிசைவும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப் பெறமாட்டா.

6. பத்து அகவைக்கு மேல் 13 அகவைக்குள்ள சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணம் உருபா 25- ஆகும். பத்து அகவைக்குக்கீழ் உள்ள சிறுவர்கள் தம் பெற்றோருடன் வரலாம்: அவர்களுக்குக் கட்டணம் இல்லை ஆனால் அவர்களை அழைத்துவரும் பெற்றோர் அல்லது உறவினர் முன் கூட்டியே அதன் விளக்கத்தைத் தலைமைக் கழகப் பொறுப்பாளர்க்குக் கட்டாயம் தெரியப்படுத்துதல்வேண்டும்.

7. விடுபட்ட அல்லது தேவையான பிற விளத்தங்கள் இனி வரும் தமிழ்நிலம், தென்மொழி இதழ்கள் வழியாகத் தெரிவிக்கப் பெறும்.

8. நிலைமைக்கும் தேவைக்கும் தக்கபடி வகுப்புத் தலைப்பும், பயிற்றாசிரியரும் மாற்றம் பெறலாம்.

கழக முதல்வர் கட்டளைப்படி,
தென்னவன்கோ, க.மு,
துணைப்பொதுச் செயலாளர்,
உ.த.மு க. 'தலைமையகம்' சென்னை-5
20-2-84

Scanned with CamScanner

உ.த மு.க. கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத்தொடர்

இடம் : அணைப்பட்டி (நிலக்கோட்டை வட்டம், மதுரை மாவட்டம்)

நாள் : தி.பி. 2015, விடை 8, (21-5-1984) முதல் தி.பி. 2015 விடை 17 (30-5-1984) வரை

நாள்	நேரம் மணிமுதல்/மணிவரை	உரைத்தலைப்பு	உரை நிகழ்த்துவோர்
விடை 8, திங்கள் (21-5-84)	காலை 8—9-30	1. தமிழ் இலக்கண அமைப்பு	பேரா. அரங்கச்செல்வன், க.மு, அரசினர் கல்லூரி, கோபி
	10—11 30	2. முதன் மாந்தவியல்	திரு. குழந்தைவேலன், க.மு, கல்வெட்டாய்வாளர்,
	மாலை 3—4-30 6—9-00	3. பாவேந்தரின் பாடல்கள் கலந்துரையாடல்	புலவர். பொதிகைச் செல்வன்
விடை 9, செவ்வாய் (22-5-84)	காலை 8—9-30	4. தமிழ் இலக்கிய அமைப்பு	பேரா. காளிமுத்து, க.மு., கலை, பண்பாட்டுக் கல்லூரி,
	10--11-39	5. பழந்தமிழகம்	பேரா'கோ.தங்கவேலனுர்.கமு
	மாலை 3—4-30 6 — 9-00	6. பிற்காலத் தமிழகம் நெல்லை, செல்வத்தாயம்மாள் செந்தமிழ் வில்லிசைக் குழுவினர் வழங்கும், பாவலரேறு அவர்களின் 'ஐயை' வில்லிசை	இல. இ. மெய்:ப. (வரலாற்றுத் தலைமைப் பேராசிரியர், சென்னை) மாநிலக் கல்லூரி,
விடை 10, அறிவன் (23-5-84)	காலை 8--9-30	7. வரலாற்றிலக்கியம்	புலவர். கடவூர் மணிமாறன்
	10--11-30	8. இனமுன்னேற்ற முன்னறிவோன் திருவள்ளுவப் பேராசான்	திருக்குறள்மணி திரு சி.அரசிறைவன், ஆறி இ
	மாலை 3—4-30 6-9-00	9. தற்காலத் தமிழகம் கலந்துரையாடல்	தென்னவன்கோ, க.மு,
விடை 11, வியாழன் (24-5-84)	காலை 8—9-30	10. சமய இலக்கியம்	புலவர். சிவசங்கு
	10—11-30	11. தமிழினம்-தாழ்ச்சியும்-வீழ்ச்சியும்-மீட்சியும்	திரு இரணியன், க.மு.ப.இ.

Scanned with CamScanner

	மாலை 3--4-30	12. எதிர்காலத் தமிழகம்- தமிழீழம்	ஈழவேந்தன்
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 12, வெள்ளி (25-5-84)	காலை 8—9-30	13. பாவாணர் மொழியியல் முயற்சிகள்	சொல்லாய்வறிஞர் ப. அருளி
	10—11·30	14. பெரியார் இனவியற்கொள்கை	புலவர் குமர. தன்னொளியன்,
	மாலை 3—4.30	15. தமிழியப் பொதுவுடைமை	மார்க்கிய அறிஞர். குணா
	6—9-00	கோட்டை இராவணன் வழங்கும் 'விடியலைநோக்கி'-நாடகம்.	
விடை 13, காரி (26-5-84)	காலை 8—930	16. எதிர்காலத் தமிழகம்- தனித்தமிழ்நாடு	புலவர் தமிழ்மாறன், க.இ,
	10—11.30	17. பழந்தமிழிசை	பேரா. வீ.ப.கா. சொல்லழகனார்
	மாலை 3—4.30	18. தமிழீழ விடுதலைப் போராட்டம்:	திரு. முகுந்தன், தலைவர் தமிழீழ மக்கள் விடுதலைகழகம்.
	6—9	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் மொழியியற் சிறப்புரை.	
விடை 14, ஞாயிறு (27-5-84)	காலை 8—9.30	19. பழந்தமிழ் நாடகப்பாங்கு	பாவலர் தஞ்சைவாணன், க.மு, சென்னை.
	10—1.30	20. தமிழின நாகரிகப் பரவல்	திரு. ந! முத்துக்குமரன்,அறி.இ,
	மாலை 3—4.30	21. பழந்தமிழரின்போர்க்கலைகள்	பேரா. செயப்பிரகாசர்.
	6—9.00	கலந்துரையாடல்	
விடை 15, திங்கள் (28-5-84)	காலை 8—9.30	22. மொழியியல் கொள்கை	சொல்லாய்வறிஞர் ப. அருளி வணி. இ, க.மு, ச.இ.
	10—11.30	23. தமிழர் கலைகள்	திரு அறவாழிஉடுமலைப்பேட்டை
	மாலை 3—4.30	24. பாவலரேறு அவர்களின் இசைப் பாடல்கள் (விளக்கவுரை)	தென்மொழி நா. இளமாறன்

Scanned with CamScanner

	6—9.00	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் இனவியற் சிறப்புரை	
விடை 16, செவ்வாய் (29-5-84)	காலை 8—9 00	25. வாழ்வியல்	திரு மா. பூங்குன்றன், க.மு, தமிழ்ப்பல்கலைக் கழகம், சென்னை.
	10—11.30	26. தற்காலக் கலப்படஅரசியல்	தென்மொழி ப. முருகவேள்
	மாலை 3—4.30	27: பாவலரேறு அவர்களின் பாடல்கள்(விளக்கவுரை)	பேரா. அரசேந்திரன், க.மு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
	6—9.00	கல்லை, அருட்செல்வனின் 'இன்னுமா தூக்கம்?'	வில்லிசை அரங்கேற்றம்
விடை 17, அறிவன் (30-5-84)	காலை 8—9.30	28. இயல்பறிவியல்	பேரா. இல.க. இரத்தினவேல் க.மு,
	10—11.30	29: தமிழர் பண்பாடு	திரு இரா. பாவாணன், அறி. இ,
	மாலை 3—4.30	30. பாவலரேறு அவர்களின் கட்டுரைகள்	தென்னவன்கோ, க.மு,
	5—6.30	ஐயந்தெளிதல் : கலந்துரையாடல்.	
	இரவு 7—10.30	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் நாட்டியற் சிறப்புரையும் நிறைவுரையும்	

வகுப்பு இடைவேளைகளில் பவானியில் நடைபெற்ற பாவலரேறு அவர்களின் பத்துநாள் திருக்குறள்—தொடர் சொற்பொழிவுகளும், உ.த.மு.க. தொடக்க மாநாட்டு இசை நிகழ்ச்சியும், பாவலர் தஞ்சை-வாணன் அவர்களின் ''களம் கண்ட பாவலன்'' நாடகமும் ஒலிபரப்பப்படும்.

தொகைகள் பணவிடை வழியே அனுப்பவேண்டும். நேரிலும் தரலாம். நன்கொடைகளும் வரவேற்க பெறுகின்றன.

தொடர்புக்கும் தொகை விடுப்பதற்கும்:
மா. பொழிலன், 'தமிழ்நிலம்'
சென்னை—600 005.

அன்புடன்,
தென்மொழி நா. இளமாறன்.
பயிற்சி வகுப்பு அமைப்பாளர்.

பயிற்சி வகுப்பு மேற்பார்வை: தென்னவன்கோ. துணைப்பொதுச் செயலர்.

மேனாள் சட்டப்பேரவை உறுப்பினரும் இனஎழுச்சி மறவருமாகிய திரு ஆ. முனியாண்டி. அவர்களின் திருமகனார் திரு. மு. அறிவழகன், க. மு, அவர்கள் பத்துநாளும் உணவு வழங்குவதற்கு அன்புடன் இசைந்துவுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

— வரலாற்றுக் கட்டுரை.

பொருநைக் கரையில் புதையுண்ட நாகரிகம்.

சித்திரம் —

வடிவேல் இராவணன்.

(குறிப்பு : இக் கட்டுரை கடந்த 19.1.84 வியாழன் இரவு 8 மணிக்குத் திருநெல்வேலி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப் பெற்றது. சென்னை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப் பெறும் நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போனவர்களுக்கு, இவ்வுரை மனஆறுதலையும், அறிவுரனையும் தெம்பையும் வழங்கும் என்று நம்புகிறோம். 'தென்மொழி' அன்பர்களையும், 'தமிழ்நிலம்' அன்பர்களையும் இதைக் கட்டாயம் படித்து நினைவிலிறுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்)

பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கமும் குமரிக்கோடும் குவலயத்தே உயர்ந்து நின்று கோலோச்சிய காலம் —.

வடபெருங்கல் — இமயம் வையத்தே தோன்றாதிருந்த காலம் —. குமரிப் பெருநிலத்தே முகிழ்த்த மாந்தப் பேரினம் தோன்றிய காலம் —.

தனிப்பேரினமாய்த் தழைத்துச் செழித்த மாத்தமிழ்ப் பேரினம். உலகின் முதன்மொழி — உயர்தனிச் செம்மொழி — நந்தமிழ்ப் பெருமொழி — நானில வாழ்வியல் வளமொடு பொங்கிப் பூத்திருந்த காலம் —.

"சிந்து மணற் பரப்பில் சிற்றில் விளையாடி
முந்தை எகுபதியர் முத்த சுமேரியத்தார்
செந்திரு நாவில் சிரித்த இளங் கண்ணி!"

என்றே எந்தமிழ்ப் பாவலரேறு போற்றும் ஞால முதன்மொழி — நம் தமிழ்நிலத்தில் முகிழ்த்தெழுந்த தென்மொழி நாகரிகம் — தென்னவர் பண்பாடாய் ஓங்கி விளங்கிய காலம் —

பையப்பைய வடக்கே நகர்ந்த நற்காலம் — பாங்குடன் ஆன் பொருநை ஆற்றுநீரை அள்ளிப் பருகிய காலம் —

அதுதான் ஆதித்தநல்லூர்க் காலம் — ஞாயிற்றொளியில் நனைந்த நனி நாகரிகம்.

— பொருநையாற்றங் கரையின் தென்பகுதியில் ஒரு பரம்பு தெரிகிறதே! அதுதான் ஆதித்த நல்லூர் நாகரிகத்தைத் தன்னுள் அடக்கிய மண்மேடு.

— ஆமாம்! தென்வடலாக நீண்டு 115 குறுக்கம் பரப்பளவு உள்ளது. வடபகுதி உயர்ந்தும் தென்பகுதி தாழ்ந்தும் உள்ளது.

— இம்மண்மேடு மாந்தவினத்தின் நாகரிகத் தொன்மையைத் தன்னுள் மறைத்துக் கொண்டு வெறுமையாய்க் காட்சி தருகிறது.

— வரலாற்றுணர்வு பெற்ற வல்லோர் சிலர் இங்கு வந்து அரிய வரலாற்றுப் பழம் பெரும எச்சங்களை அகழ்ந்து காண ஆவலாய் இருந்தனர்.

— இந்தியாவிலேயே முதன்முதலாக அகழ்வாழ்வு நடத்தப் பெற்றது ஆன்பொருநை எனப்படும் தாமர வருணீராற்றங் கரையில் அமைந்த ஆதித்த நல்லூரில்தான்.

— வரலாற்றின் கமுக்கத்தை வெளிப்படுத்திய அந்த நல்லறிஞர் யார் தெரியுமா?

— செருமானிய நாட்டிலிருந்து இங்கு வந்து 1876-ஆம் ஆண்டு அகழ்வாய்வு செய்த பர். சாகோர் (Dr. Jagore) என்பவரே.

- அப்பொழுது நெல்லை மாவட்டத்தின் தண்டல் நாயகமாக விளங்கிய சிதுரவர்ட்டு (Stuart) என்பாரின் உதவியுடன் அகழ் வாய்வினைத் தொடங்கினர்.

— தாழிகள், எலும்புகள், பொற்பட்டங்கள், வெண்கல ஏனங்கள், இரும்புப் பொருள்கள், மட்பாண்டங்கள் ஆகியவற்றை அகழ்ந் தெடுத்தார். அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு தனது தாயகத்தின் தலைநகரான பெர்லின் அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருள்களாக இடம் பெறச் செய்தார்.

— 1903-1904-இல் ஃபிரான்சிலிருந்து இங்கு வந்த இலூயி லாபிக்கியூ (Louis Lapicque) என்பார் அகழ்வாய்வு செய்து பார்த்தார். அவரும் தாம் கண்டவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு பாரிசு போய்ச் சேர்ந்தார். வரலாற்று எச்சங்கள் கொள்ளை போகின்றன.

— ஆண்டு வந்த ஆங்கிலப் பேரரசிற்கு அனைத்தையும் விளக்கினர் தண்டல் நாயகம் சிதுரவர்ட்டு. இதனையுணர்ந்த அரசு, அலெக் சாண்டர் ரீ என்பாரையனுப்பி,மேலும் ஆய்வு செய்யத் தூண்டியது.

— 1899 முதல் 1905 வரை வெளிவந்த "தொல் பொருளாய்வுத் துறை" அறிக்கைகள் அகழ் வாய்வின் முடிவுகளை அறிவித்தன.

— அவற்றுள் இரும்புப் படைக் கலன்கள், தொழிற் கருவிகள், கத்திகள், குறுவாள்கள், கைக்கோடரிகள், எலும்புகள், தலையோடு கள், மண்தாழிகள் ஆகியவை அடங்கும்.

— 90 சதுர அடிப்பரப்பில் ஆய்வுக்குழு வெட்டிப் பொருள்களை எடுத்தனர்.

Scanned with CamScanner

— 25 முதல் 30 வரை பெருந்தாழிகள் காணப்பட்டன.

— ஆதித்த நல்லூர்ப் பரம்பு முழுவதும் சாவு வினைக்குரிய புதை தாழிகள் உடைந்து சிதறிக் கிடந்தன.

— கிடைத்த பொருள்கள் எல்லாவற்றையும் "ஆதித்த நல்லூரிலும் பெரும்பையாற்றிலும் அகழ்ந்தெடுக்கப் பெற்ற தொல்பழங் கால எச்சங்களின் பட்டியல்" (Catalogue of the Pre-Historic Antiquities in Perumbair and Adichanallur) என்னும் வெளியீட்டில் தொகுத்தார் அலெக்சாண்டர் ரீ.

— இந்த வெளியீடு 1915-ஆம் ஆண்டு வெளிவந்தது.

— சுக்கர்மேன் (Zuckerman) என்பார் "ஆத்த நல்லூர்த் தலை யோடுகள்" என்னும் நூலை வெளியிட்டார்.

— 1920ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் அரப்பா என்னு மிடத்தில் அகழ்வாய்வு தொடங்கியது.

— 1922-ஆம் ஆண்டிலே சிந்து மாநிலத்தில் மொகஞ்சாதோரோ வெளிக் கொணரப்பட்டது.

— மொகஞ்சாதோரோவை அகழ்வாய்வு செய்த பேரறிஞர் பானர்சி 1927-ஆம் ஆண்டு "திரவிட நாகரிகம்" என்னும் பெரிய கட்டுரையொன்றினை வெளியிட்டார்.

— 1937-ஆம் ஆண்டு "தமிழர் பண்பாடு" என்னும் நூலினை எழுதி வெளியிட்டார் பேராசிரியர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர்.

— வயவர் சாண் மார்சல் என்பாரின் "மொகஞ்சாதோரோவும் சிந்து வெளி நாகரிகமும்" என்ற நூலின் மூன்று தொகுதிகளும் 1931-இல் வெளிவந்தன.

— "அரப்பாவில் அகழ்வாய்வு" என்னும் நூலினை வாட்சு (Vatz) என்பார் வெளியிட்டார்.

— 1951-இல் வெளிவந்த "தொல்பழங்காலத் தென்னிந்தியா" என்ற நூலும், 1970-இல் வெளிவந்த "தமிழரின் தோற்றமும் பரவலும்" என்ற நூலும் தமிழரின் பிறந்தகத்தையும் நாகரிக முன்மையையும் பண்பாட்டுத் தொன்மையையும் உலகுக்கு உணர்த்தின.

— இந் நூல்களை எழுதியவர்தாம் வரலாற்றுப் பேரறிஞர் வி. ஆ. இராமச் சந்திர தீட்சிதர்.

— 1974-இல் ஆங்கிலம், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, வங்காளி முதலான பதினான்கு மொழிகளில் வெளியிடப் பெற்ற "இலெமூரியாக் கண்டத்தின் மருமம்" என்னும் கட்டுரை சோவியத்து ஒன்றியத்திலிருந்து வெளிவந்தது.

Scanned with CamScanner

— பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மூல முதல் நாகரிகத்தின் கூறுபாட்டினை விளக்கிய வகையிலும், கொடுங்கடல் கொண்ட குமரிக்கண்ட உண்மையைத் தெரிவித்த வகையிலும் இக்கட்டுரை சிறந்து விளங்குகிறது

— ஆதித்த நல்லூர் நாகரிகம் வரலாற்றுப் புதிரை விடுவிக்கும் சூக்குமமாக அமைந்தது

— அங்கு அகழ்ந்தெடுக்கப் பெற்ற பொற்பட்டங்களும், இரும்புப் பொருள்களும், வெண்கல ஏனங்களும், மட்பாண்டங்களும் முது மக்கள் தாழிகளும், பழந்தமிழர் நாகரிக வாழ்வின் தொன்மையைப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நகர்த்திச் செல்கின்றன.

வேறு காட்சி

ஆசிரியர் : நெல்லையிலிருந்து ஆதித்த நல்லூரைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்துள்ளோம். யாரிடமிருந்து விளக்கம் கிடைக்கும்.

வழிப்போக்கர் : இங்கிருந்து திருச்செந்தூர் போகும் சாலையில் அம்மன்புரம் என்று ஒரு சிற்றூர் உள்ளது. அங்குப் புலவர் தமிழ் மாறன் என்று ஒருவர் உள்ளார். அவரே இதைப்பற்றி விளக்கமாகத் தெரிந்தவர்.

ஆசிரியர் : நன்றி; வருகிறோம்.

வேறு காட்சி

ஆசிரியர் : நீங்கள்தானே தமிழ் மாறன்! வணக்கம்.

தமிழ்மாறன் : வணக்கம். நானேதான். நீங்கள் . . .

ஆசிரியர் : நாங்கள் ஆதித்த நல்லூரைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்துள்ளோம்.

தமிழ்மாறன் : எனக்குத் தெரிந்ததைச் சொல்ல அணியமா யுள்ளேன். ஆதித்த நல்லூரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டு மென்று எனக்கும் நீண்ட நாட்களாக ஆவல் இருந்தது. அதன் தொடர்பாக நூலகத்தில் தேடிக் கொண்டிருந்த பொழுது வறிஞன் ஒருவன் காலில் பொற்கிழியொன்று தட்டுப்பட்டது போல் ஒரு நூல் கிடைத்தது. அந்நூல "ஆதித்த நல்லூரும் பொருநை வெளி நாகரிகமும்" என்பதாகும். சாத்தன்குளம், நுண்கலைச் செல்வர் இராகவன் என்பார் எழுதியது. உடனே சாத்தன்குளம் சென்று இந்நூல் வெளிவந்த வரலாறு பற்றி உசாவினேன். இராகவன் குடும்பத்தார் கூறிய செய்திகள் என்னை மெய்சிலிர்க்க வைத்தன.

1912-ஆம் ஆண்டு இராகவன் சிறுவராக உள்ளபோது தந்தையார் நெல்லைக்கு அழைத்துச் சென்றார். வழியில் ஆதித்த

நல்லூர் மண்மேட்டினை-பண்டை மாந்தரின் இடுகாட்டினைக் கடந்து சென்றனர். அப்பொழுது தந்தையார் "மகனே, இதுதான் பழம் பெருமை ஆதித்த நல்லூர் தமிழர் நாகரிகத்தைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருப்பது" என்றார். இராகவனுக்கு அப்பொழுதே பொறிதட்டியது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டது. எதிர் காலத்தில் ஆதித்த நல்லூர் பற்றி ஒரு நூல் எழுத வேண்டுமென்று எண்ணினார். பல நூல்களையும் கற்கத் தொடங்கினார். இராகவன குடும்பம் பெரும்புலவர் மரபைச் சார்ந்தது. அதனால் அறிவு வேட்கை கொண்டு பலவற்றையும் தேடிப் படிக்கத் தொடங்கினார். இக் காலத்தில்தான் அரப்பாவும், மொகஞ்சாதோரோவும் அகழ்ந் தெடுக்கப் பெற்று வெளிக் கொணரப்பட்டன. வரலாறு ஒரு புதிய திருப்பத்தைக் கண்டது. அரப்பாவும், மொகஞ்சாதோரோவும் திரவிடர் கண்ட நாகரிகச் எச்சங்கள் என்பது நிலைநாட்டப் பட்டது. அது வரையில் ஆரியரின் நாகரிகமென்றும், ஆரியர் நாகரிகமே உலகின் மூத்த நாகரிகமென்று செய்திகள் வந்தவண்ண மிருந்தன. மேலும் நமது இராகவன் ஆராய்ந்து வருகிறார்.

வயவர் சாண் மார்சல், மெக்கே, மார்ட்டிமர் வீலர் போன்றோரின் நூல்கள் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

1932-இல் ஈரோட்டில் பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் தொடங்கி 25-க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி வெளியிட்டார். 1936 ஆம் ஆண்டு தமது சொந்த ஊரான சாத்தன்குளம் வந்து "அறிவு" - என்னும் திங்களிதழைத் தொடங்கினார். சிந்து வெளி நாகரிகம் திரவிடரின் நாகரிகமே என்பதை நனகு உணர்ந்தார். அவ்வாறாயின் ஆதித்த நல்லூர் நாகரிகம் தனித் தமிழ் நாகரிக மன்றோ என்பதையும் கண்டுணர்ந்தார். ஆனாலும் நூல் எழுதத் தொடங்கவில்லை

1948-இல் இலங்கை சென்றார். அங்கு அச்சகம் ஒன்றினைத் தொடர்ந்து அறிவுப்பணி ஆற்றி வந்தார். இலங்கையிலிருந்து பல நூல்கள் எழுதி வெளியிட்டார். 1950-இல் நூல்கள் வாங்குவதற் காகச் சென்னை வந்தார். தமிழர் தனி நாகரிகத்தைக் காட்டும் நூல்கள் ஏதேனும் உள்ளனவா என்று தேடினார். 25 பக்க அளவுள்ள ஒரு சிறு ஆங்கில நூல் கிடைத்தது. அதைக்கண்ட வுடன் சிந்தனையில் வீறு ஏறிவிட்டது; அறிவு திண்மை பெற்று விட்டது ஆனால் எழுதி வெளியிடுவதற்கு ஏடுகள் - இதழ்கள் வேண்டுமே? பாரதிக்கு ஒரு சுதேசமித்திரன் கிடைத்தது போல் இராகவனுக்குத் தமிழ் நாட்டில் இதழொன்றும் கிடைக்கவில்லை. சிங்கப்பூரிலிருந்து தமிழ் மொழி, இனத்திற்காகத் "தமிழ் முரசு" என்றோர் இதழ் இயங்கி வந்தது அதில் கட்டுரைகள் எழுதி வந்தார். உலகம் இராகவனை அறியத் தொடங்கியது. பேராசிரியர்

இராமச்சந்திர தீட்சிதரின் "தமிழர் தோற்றமும் பரவலும்"). என்னும் நூல் அவர்க்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து 1974-இல் "சோவியத் நாடு" இதழில் அலெக்சாண்டர் கொந்தராத்ரோவ் என்பார் "இலெமூரியாக், கண்டத்தின் மருமம்" என்னும் தலைப்பில் ஏழு கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அந்நூல் இராகவனுக்கு மிகுந்த மகிழ்வைத் தந்தது. அஃதோர் ஒளிவிளக்காக அமைந்தது. தமிழ்மொழி தென்னிந்தியாவில் மட்டுமின்றி, நடுவிந்தியா, வடவிந்தியா, பலுச்சித்தானம், ஈரானின் தென்பகுதி, இவை தாண்டி, எல்லமியம், எகுபதியம், சுமேரியா வரை தமிழ்மொழி பரவியிருந்ததை அந்நூல் காட்டுவதை உணர்ந்தார். இந்நூலே அவர் எழுதுவதற்குரிய அடித்தளத்தை அமைத்தது. உடனே "ஆதித்த நல்லூரும் பொருநை வெளி நாகரிகமும்" - என்ற நூலை எழுதத் தொடங்கினர்,

(தொடரும்)

தென்மொழி தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : சென்னை
2. கால முறை : மாதம் ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர் : திருவாட்டி. மா. தாமரை
   இனம் : தமிழர்
   முகவரி : தென்மொழி அச்சகம், சென்னை-5
4. வெளிடுவோர்பெயர் : திரு. பெருஞ்சித்திரனார்.
   இனம் : தமிழர்
   முகவரி : தென்மொழி அச்சகம். சென்னை-5
5. ஆசிரியர் பெயர். திரு. பெருஞ்சித்திரனார்,
   முகவரி : சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்குமேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் | திரு! பெருஞ்சித்திரனார், சென்னை-5

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள] விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—2—1984 }
சென்னை-5 }

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

கடல் உழவரும் கழனி உழவரும்.

புலவர். ச. சிவசங்கு, சிறுதொண்ட நல்லூர்.

"கலப்பையைக் கையால் பிடித்துக் கழனியில் உழும் உழவர், பிறரிடம் சென்று இரக்க மாட்டார். ஆனால், தன்பால் வந்து வறியவர் இரந்தால் மறைக்காது சிறிதளவேனும் கொடுப்பர்" என்ற கருத்தமையத் திருவள்ளுவப் பேராசான்

"இரவார் இரப்பார்க்கொன் றீவார்கரவாது
கைசெய்து ஊண்மாலை யவர்"

என்று நல்லுழவர் செய்தியைக் கூறினர்.

முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன் எனும் புலவர் அகநானூறு முப்பதாம் பாடலில்,

"பெருங் களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசும்" - வலியகாளையை ஒத்த கடலேருழவர் (செம்படவர்), கழனி உழவர் களத்தில் சேரக் கூட்டிய பொலியில் உள்ள நெல்லை வறியோர்க்கு வழங்குவது போல, தம் வலையில் கொண்டு வந்த மீனைத் தம்மிடம் வந்து இரப்போர்க்குக் கிழிந்த பெட்டி நிறைய அள்ளிக் கொடுப்பர் என்று கூறி உள்ளார்.

இலக்கியத்தில் மட்டுமா?, இன்றும்.........

வயலை அறுத்துப் பொலி தூற்றிக் கூட்டும் போது வறியவர் வந்து, மேலாடை, அல்லது சிறுபெட்டியை விரித்து "ஐயா..." என்றிரந்தால் ஒருவகை நெல்லேனும் போட்டு மகிழ்வதையும், இதே போல, கடலில் மீன் பிடித்துக் கரையில் தட்டி விற்கும் போதும், "ஐயா..." என்று இரப்போர் இரந்தால் அக் கடலேருழவரும் கிழிந்த பெட்டியில் அள்ளிப் போட்டு மகிழ்வதையும் இன்றும் நேரில் காணலாம். நம் முன்னோர் காத்த மரபு இன்றும் மாறாமல் தமிழ் மக்கள் நிலைநிறுத்தும் செயல் கண்டால் வியக்கலாம் அன்றோ! O

'தமிழ் நிலம்'

கிழமை இதழ் - சென்னை-5

1. தனியிதழ் விலை உரு.0.65
2. ஆண்டுக் கட்டணம் உரு. 36.00
3. அரையாண்டுக் கட்டணம் உரு. 18 00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு தமிழ்நிலம், : 5, அருணாசலத்தெரு, சென்னை-5.

முன்னும் நடந்தது! இன்னும் நடக்கும்! என்ன செய்வது!

, தென்மொழி கல்லை. அருட்செல்வன்.

(தென்மொழி சுவடி 20; ஓலை 1-2.ல் வெளிவந்த "இது நடந்திருக்கக் கூடாது!....... காலம் அப்படி!" என்ற கட்டுரையின் சார்புக் கட்டுரை.)

மாந்த மனத்துக்கு ஓர் இயல்புண்டு. எங்கெங்கு இயலுமோ அங்கெல்லாம், எப்படியெப்படிக் கூடுமோ அப்படியெல்லாம் தன்னை முதன்மைப் படுத்திக் காட்டிக்கொள்ளும் இயல்பே அது.

ஏறத்தாழ மாந்தர் அனைவரிடமும் அமைந்துள்ள இத் "தன் முகாமை" (Self - Importance) இயல்பு, நல்ல மெய்யறிவு வாய்க்கப் பெற்ற மிகச் சிலரிடமே அடங்கிக்காணப் பெறும்; முகாமையான ஒரு தேவை கருதியே அவரிடத்து வெளிப்படும் பிறரிடத்தில் தேவையின்றித் தற்பெருமையாக வெளிப்படுகின்றது.

தெருவில் நடந்து செல்லும் ஒருவன் எல்லாரும் தன்னையே கவனிப்பதாக எண்ணிக் கொள்கிறான்; சிலர் ஒன்று கூடி நடந்தாலும், ஓரிடத்திருந்தாலும் அவரில் ஒவ்வொருவரும் பிறர் தன்னையே கவனிப்பதாக எண்ணிக் கொள்கின்றனர்.

அதிலும் தெருவில் எதிரே ஒரு பெண் வந்தால் அவள் தன்னையே பார்ப்பதாக ஆடவன் ஒவ்வொருவனும் எண்ணிக் கொள்வான். அவளோ, பிறர் எல்லோரும் தன்னையே பார்ப்பதாக எண்ணிக் கொள்கிறாள். (இது பல இடங்களில் உண்மையாகவே உள்ளது.)

தன்முகாமை இயல்பு ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு படிநிலையில் அமைந்து கிடக்கிறது. குமுகாய அளவில் தம்மை முதன்மைப்படுத்த விரும்புவோர் பொதுத் தொண்டிலும் கலைத் துறைகளிலும் ஈடுபடுவதும் தம் திறமைகளைப் பல வழிகளிலும் வளர்த்துக் கொண்டு வெளிப்படுத்துவதும், 'வாகை'த் திணைப் பேறடைவதுமாய் உள்ளனர்.

தம் நினைப்பின் அளவு தம்மை முதன்மைப் படுத்திக் கொள்ள இயலாத சிலர் எப்படியேனும் அதைச் செய்து • காட்ட முனைகின்றனர். இத்தகைய "புகழைத் தேடும் புழுக்கள்" எல்லாக் காலங்களிலுமே இருந்து வந்துள்ளனர். அரசியல் சாய்காலும் செல்வச் செழிப்பும் உடையவர் முதல் அவை அமையாத அடிநிலை மாந்தர் வரை எல்லா நிலைகளிலும் இன்றும் இருக்கத்தான் செய்கின்றனர். (பொறாமை முதலிய கூடாக் குணங்கள் இது தொடர்பாகவே விளைகின்றன).

இத்தகையோரை மனக்கோட்டம் உடையவராகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது. காயல் பட்டினத்துத் தமிழ்ப்புலவரும் இத்தகையோருள் ஒரு வகையினரே.

அவர் செய்தது போலவே, 1969-இல் நிகழ்ந்த ஒன்றை ஈண்டுச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

தே.கல்லுப்பட்டி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. விடுதியில் வாழ்ந்த காலம். ஓரிரு நண்பர்களுடன் பாட்டுலகில் கால் வைத்திருந்தோம். பா வடிவம், பொருள், யாப்பமைதிகள் பற்றி நாங்கள் கலந்துரையாடுவதுண்டு. ம ..... என்னும் நண்பர் பா எழுதவும் எங்கள் பேச்சில் கலந்து கொள்ளவும் விரும்பியும் கூட, ஏனோ ஒதுங்கியே இருந்தார்.

ஒருமுறை எங்கள் உரையாட்டில் ''மண்டிலப் பா (விருத்தம்) அடிகள் 'மா' வில் முடிய வேண்டும்'' என்று பேசிக் கொண்டிருந்ததை அரைகுறையாகக் கேட்டுவிட்டு

''ஏனம்மா நானம்மா, வரலாமா தரலாமா,
நில்லம்மா சொல்லம்மா ...... '' என

மா என்ற எழுத்தில் முடியுமாறு சொற்களை அடுக்கிப் பொருளின்றிப் 'பாடல்'(?)எழுதிக் காட்டி எங்களை விழுந்து விழுந்து சிரிக்க வைத்தவர்.

ஆசிரியப் பயிற்சி முடியும் காலம்; ஒவ்வொருவரும் தம் முகவரிச் சுவடிகளில் 'பொன்னுரையும் கையெழுத்தும் முகவரியும்' பெற்று நிரப்பிக் கொண்டிருந்தனர். ஒருவரது முகவரிச் சுவடியில் நண்பர் ம ..... எழுதியிருந்த பாடலைக் கண்டு வியந்த வேறொரு நண்பர், அதை என்பால் கொண்டு வந்து காட்டி, ''தாமே இயற்றியதாகச் சொல்கிறார். நம்ப இயலவில்லை. நல்ல கருத்துச் செறிவுள்ள வெண்பா. இவரால் எப்படி இயலும்?'' என வினவினார்.

நண்பர் ம .. ... எழுதியிருந்த பாடல் :

''சாகின்ற செந்தமிழ்ர் சாகா விடுதலைக்கே
போகின்ற தெண்ணிப் புறப்படுங்கள் — மாகுன்றத்
தோளும் மணிமார்பும் தூங்காத நல்லுணர்வும்
நாளும் துணையாம் நமக்கு''

எனக்கு உண்மை விளங்கி விட்டது. நண்பர் ம ...... னிடம் சென்று கேட்டேன். தாமே எழுதியதுதான் என்று அவர் சொன்னபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. (அந்தக் காலகட்டத்தில் 'சினம்' வரவில்லை.)

பிறகு, ''இது 'தென்மொழி' என்ற மாத இதழின் முகப்புப் பாடல்தானே'' என்று நான் குறிப்பாகக் கேட்ட போது நண்பர் இளித்துக் கொண்டே 'ஆமாம் ......' என இழுத்தார்.

லேசர் (LASER) ஒளியின் பயன்கள்!

— அ. பெரியசாமி. அறி.மு.

லேசர் (LASER) என்பது ஆங்கிலத்தில் 'Light Amplification by Stimulated Emission of Radiation' என்பதன் முதலெழுத்துகளால் ஆகிப் பல சிறப்புத் தன்மைகள் கொண்ட ஒருவகை ஒளிக்கற்றையைக் குறிக்கும் சொல்லாகும். லேசர் ஒளிக்கற்றை (Laser Beam) பொதுவாக ஒளிமூலங்களிலிருந்து (Light Sources) வரும் ஒளியை விட மாறுபட்டது. லேசர் ஒளிக்கற்றை பல கற்கள் தொலைவுக்கு எவ்வகைச் சிதறலும் (அல்லது விரிவும்) இன்றி நேர் கோட்டிலேயே செல்லும் தன்மை பற்றது. ஆடிகளால் (Lenses) நேர்படுத்தப்படும் ஒளிக்கற்றை (Light beam) குறைந்த தொலைவிலேயே பரந்து விரிந்து செல்லும். இந்த நேர்கோட்டில் செல்லும் தன்மையினால் ஒளியின் அளவு குறையாமல் இக்கதிர்களை நெடுந் தொலைவுகளுக்கு அனுப்பிப் பல ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடிகிறது. லேசர் ஒளியை நிலவுக்கு அனுப்பி இடையிலுள்ள தூரத்தைக் கணக்கிடலாம். இவ்வொளியின் உதவியால் இயல்பியலில் (Physics) பல அடிப்படை எண்களை (Fundamental constants) மிகத்துல்லியமாகக் கணித்துள்ளார்கள். இவ்வொளியை 1960-இல் மெய்மன் என்ற அறிவியல் அறிஞர் கண்டுபிடித்தார். பருமம், நீர்மம், வளி ஆகிய மூன்று நிலைகளிலான பொருள்களிலிருந்தும் லேசர் ஒளியை உண்டாக்க இயலும்.

லேசர் ஒளியின் பயன்கள் எண்ணற்றவை. தொழிலகங்களில் கரிவளி (carbon - di-oxide) லேசரைக் கொண்டு மாழைகளை (metals) மிக அதிக வெப்பநிலைக்குக் கொண்டு சென்று உருக்க, வெட்ட, இணைக்க இயலும். லேசர் ஒளிக்கற்றையின் அளவினை (விட்டம்) மிகச்சுருக்கமானதாகச் செய்து வேறு கருவிகளால் இயலாத அளவுக்குச் சிறிதாக, எடுத்துக் காட்டாக 0.001 பதின்

(முன் பக்கத் தொடர்ச்சி)

"இதை எழுதித் தந்தது தவறில்லை. ஆனால் இயற்றியவர் பெயரையும் அடியில் குறிப்பிட்டிருந்தால் பண்பும் பயனுமாய் இருந்திருக்கும்" என்றேன்.

திருவள்ளுவர் காலத்திலே கூட இத்தகைய மனக்கோட்டம் உடையவர் இருந்ததால்தான்,

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்" என்று

குறளியாத்தாரோ என எண்ணத் தோன்றுகிறது.

என்ன செய்வது? இதுபோல் முன்னும் நடந்தது; பின்னும் நடக்கும்! ○

மாத்திரி (மில்லி மீட்டர்) விட்டமுள்ள துளை போட முடியும். மருத்துவத்துறையிலும் இக்கதிர்கள் பரவலாகப் பயன் படுத்தப் படுகின்றன. கண்ணில் உள்ள சில குறைகளைப் போக்கவும், அறுவைப்பண்டுவம் செய்யவும், தலையில் உள்ள அணு உயிர்களை ஆராயவும், எலும்பின் வலுவை ஆராயவும், நெஞ்சத்தின் குறைபாடுகளைக் கண்டு பிடிக்கவும் பயன்படுத்துகின்றனர். இயந்திரத் துமுக்கிகளுக்குப் பகரமாக லேசர் துமுக்கிகளைப் பயன்படுத்தவும், வானில் ஏவுகணைகளால் எறியப்படும் அணு குண்டுகளைத் தரைக்கு வருமுன்பே தகர்த்தெரியவும் இவற்றைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொலைபேசியில் கம்பிகளுக்குப் பகரமாகக் கண்ணாடியால் செய்யப்பட்ட மிக்மெல்லிய இழைகளின் (Fibre Optics) வழியாக லேசர் ஒளியைச் செலுத்தி ஏராளமான அளவு செய்திகளை அனுப்ப இயலும்.

லேசர் ஒளியின் மிக முகாமையான பயன்களில் ஒன்று முப்பரிமாணப் (3D photography) புகைப்படங்கள் எடுப்பதாகும். இப்படங்களின் மூலம் பொருள்களை நேரில் பார்ப்பது போலவே, பொருள்களின் இடைவெளித் தூரத்தை உணரலாம். வேதியல், இயல்பியல் ஆராய்ச்சிகளிலும் இவ்வொளி மிகப்பயனுள்ளதாக இருக்கின்றது. இத்தகைய ஒளியைக் கொடுக்கும் கருவிகளை அமெரிக்கா, உருசியா, செர்மனி, சப்பான் போன்ற நாடுகள் பெருமளவில் உருவாக்கிப் பயன் படுத்தி வருகின்றன. இப்பொழுது இந்தியாவிலும் இத்தகைய கருவிகள் செய்யப்பெற்று பயன்படுத்தப்படுகின்றன. O

பிழை திருத்தம்

சென்ற இதழ் (சு. 20 ஓ. 1-2) ஆசிரியவுரையில்,

அட்டைப் பாடல், களையுமோ என்பதைக் கலையுமோ என்றும்,

பக்.3. வரி 15 வாங்குதிறணுக்கும் ,, வாங்குதிறனுக்கும் ,,

பக்.6. வரி.20 தொடர்பற்ற ,, தொடர்புற்ற ,,

பக்.7, பத்தி3வரி9 பயன் ,, பயன் ,,

பக்.8 வரி.21 அப்பொழுதெல்லால்,, அப்பொழுதெல்லாம்,,

— என்றும் திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்களைக் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

சவை

— நா. எழில்- மகிழ்நன்,

தமிழ் மொழியில் பண்டு வழங்கி வந்த பல்லாயிரக்கணக் கான சொற்கள் இன்றைக்கு இருக்குமிடம் தெரியாது, இறந்து வருகின்றன. அதற்கு முழு முதற்கரணியம் தமிழ் மக்களின் பேச்சு வழக்கும், எவ்வகை (ஏ)மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளும் நிலையுமேயாகும். ஆகவே. கற்பாரும், கற்றாரும், கற்றறிந்தாய்ந் தடங்கியாரும் இறந்த சொற்களை வழக்கிற்குக் கொணர்தல்-தம் தலைக்கடனென உணர்தல் வேண்டும், வழக்(கொ)கிழந்த சொற்களில் சவை சொல்லின் முன்மை, தொன்மை, பயன்பட்டு வந்த முறைமை முதலியனவற்றை ஈண்டு ஓரளவு ஓர்வோம்:

சவை என்ற தொல்லிய சொல்லை விடுத்து, இப்பொழுது வடமொழிச் சொல்லான 'சபா' வினின்று பிறந்த 'சபை' என்ற சொல்லையும்; 'சவை' யின் நேரிய பொருளைத் தரவல்லதும் தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பெற்றுள்ளதுமான 'அவை' என்ற சொல்லையும் (சில்லோர்) வழங்கியும் வழங்குவித்தும் வருகின்றனர்

சவை என்னும் தென்சொல், 'சிறைச்சவையார்' என்று பாண்டியர் செப்பேட்டிலும்; 'சவையார், 'சவைவாரியர்' என்பன சிற்றூர் ஆட்சியாளரைக் குறிக்கக் கல்வெட்டுகளிலும் காணப் பெறுகின்றன.

பிங்கல சொற்றொகுதி (நிகண்டு), ஆடவர் கூட்டத்தையும்; திவாரக சொற்றொகுதி, கற்றறிந்தோரையும் குறிக்கச், 'சவை' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளமை மகிழ்ற்பாலது. அடுத் துச் சவை என்ற சொல்லின் மூலங் காண்பதற்குப் பகரமாக (பதிலாக) அவை என்ற சொல்லின் மூலங்காணலே போதரும்!

"அமைதல் — நெருங்குதல், கூடுதல்
அமை — கூட்டம்
அமை — அவை (ஒப்பு நோக்க: அம்மை—அவ்வை)
சவை — சபா (வடசொல்)

மேற்கண்ட விளங்கங்களினின்று, சவை என்ற சொல்லின்றே 'சபா' என்ற வடசொல் தோற்றுவிக்கப் பெற்றிருக்க வேண்டு மென்பது வெள்ளிடைமலை.பின், 'சபா' தமிழொலிப் பலுக்கலுக்கு (உச்சரிப்புக்கு) ஒவ்வாமை கண்டு, 'சபை' என்றாக்கி வழங்க வைத்தனர் வடவர். இல்லெனின், சவைஎன்ற சொல்லினின்றே சபை என்ற சொல்லை உருவாக்கிக் கொண்டிருக்கலாமென்று எண்ணவுமிடமுண்டு. தமிழில், வகரம் பகரமாதல் இயல்பு (எ-டு) வண்டி-பண்டி.

சவை, அவை ஆகிய இரு தூய தென் சொற்களும் முறையே பட்டையங்களிலும், கல்வெட்டுகளிலும் கழகக் கால இலக்கியங் களிலும் காணப்படுவதால், இவை தீந்தமிழ்ச் சொற்களே என் பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆயின், அவை என்ற சொல் வழக் கிழக்கும் நிலையிலுள்ளது. எனவே, வாய்ப்பு நேருங்கால், வழங் கியும் வழங்குவித்தும் வந்தால், மீண்டும் வழக்கூன்ற வேண்டிய வண்டமிழ்ச் சொற்களின் பட்டியலில் சேருமென்பது திண்ணம்.

Scanned with CamScanner

பார்ப்பனர்கள் சாதி, மதம் கடவுள் என்ற பகுத்தறிவிற் கெட்டாத மூடப்பழக்கங்களை நம்மவர்க்குப் புகுத்தி அதனால் மேன்மையடைந்தனர் என்பது அறியாத ஒன்றன்று.

இருந்தும் தாங்களும், பார்பனர்களுக்கு நம்மவர்களை ஏமாற்ற ஏந்தாயிருக்கிற கடவுளை மக்களுக்குப் புகுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பதுதான் ஏனென்று விளங்கவில்லை,

தங்களது 'உலகியல் நூறு" பொத்தகத்தில் இறைத் தொடர்பான செய்திகள் மட்டும் இல்லாது இருந்தால், இன்னும் சில ஆண்டுகளில் மலரப்போகும் சாதி, மதம், கடவுளற்ற தனித் தமிழ்நாட்டு இலக்கியங்களில் தலையான தாயிருக்கும் என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். ஐயா, மடலில் மடத்தனமிருந்தால் மறுத்து மன்னிப்பீர்!

—மு. துரை, முத்தரையர் பாளையம், புதுவை-10

0: 990: தமிழினத்தின் விடிவெள்ளியாம் விடுதலைப் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம் பல!

ஐயா! யான் தொடர்ந்து 10 ஆண்டுகளாகத் தென்மொழி உறவுள்ளவன். தங்களுக்கும், தங்கள் (நமது) விடுதலை இயக்கத்துக்கும் அடிமையானவன்- தமிழின விடுதலை நோக்கில் மிகவும் ஆர்வமுள்ளவன்.

தங்களை 3 முறை நேரில் கண்டு, உரை மழையில் நனைந்தவன். தாங்கள் பழனிவந்திருந்தபோது, உங்கள் உரைதனைக் கேட்டு மனம் மாறித் தொடர்ந்து (பகடி செய்தவர்கள்) தமிழ்நிலம் கேட்டு, வாங்கிப் படித்து வருகின்றனர். கடந்த மூன்று கிழமை இதழ்களிலும் தங்கள் உரையினைக் கண்டதிலிருந்து, சிலர் ஒரு முகாமையான இயக்கத்தின் மேல் வெறுப்புக் கொண்டு விலகித் தென்மொழி இயக்கத்தில் இணைந்து விட்டனர். தங்களைப் பற்றி அவதூறு பரப்பிய, பேராசை பிடித்த பேராசிரியரையும், தங்கள் உரையினை மறைத்த தலைவரையும் தாழ்வாக எண்ணவேண்டியுள்ளது. மடல் எழுத, எழுத உணர்வுப் பெருக்கால் வேறு தவறாக அவர்களைப் பற்றி எழுத நேரிட்டு விடும். வேண்டாமென முடிக்கின்றேன். ஏனெனில் நான் குறைந்த அகவையுடைய் இளைஞன். தங்களின் தென்மொழித் தொண்டு உயர்ந்து- தமிழின மீட்சி விரைவில் காண, தமிழின விடுதலைகாண என் அன்பான எதிர்பார்ப்புகள் - கண்டிப்பாக யான் துணை நிற்பேன்.

தங்கள் உண்மையுள்ள மாணவன்.
— பூண்டிமறவன், அமரர் பூண்டி

0: 991: பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். சென்ற தென்மொழி இதழ் கண்டேன், தனித்தமிழ் அறிஞர் ஒருவர் செருமனியம், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சுற்றுச்செலவு மேற்கொண்டு தனித்தமிழ்க் கொள்கைக்கு வளர்ப்பு அரணாக விளங்குகிறார் என்பது மகிழ்ச்சிக்குரியது: தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தாங்கள் ஆற்றிவரும் பணியைத்தமிழகம் மறக்காது,

தங்கள் செருமானியச் செலவில் தங்களுக்கு மனத்தாங்கலும் வருத்தமும் தரும்வகையில் தங்களுடன் வந்தவர் நடந்து கொண்டார் என்னும் செம்மையின் இகந்தசொல் செவிப்புலங் கொளும்போது மனம் நோகிறது. அதை இதழில் எழுதாமல் தனிப்பட அவரை நேரில் அழைத்து அறிவுரைத்து நல்லாற்றுப் படுத்தியிருக்கலாம். தமிழ்ப்பெருமக்கள் இப்படித்தானா என்று பிறர் நினைக்க இடந்தந்து விடக் கூடாது என்பதே என் எண்ணம்.

உண்மையான நிலை என்னவோ? தாங்கள் பொறுத்துக்

Scanned with CamScanner

நேர்ந்திருப்பின் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள முடியாது.

'தங்களுக்கு' நெடுநாட்களாக யான் விடுக்க நினைத்த ஒரே வேண்டுகோள்.

தங்களுக்கு அமைந்த பெரும்புலமை யாற்றல் மிகப்பெரிய வனப்பு (பாவியம்) படிக்கப் பயன்பட வேண்டும். பாரதம் (ஓரிலக்கம் பாடல் கொண்டது) இராமாயணம் ஆகிய இருவனப் புகளைக் கொண்ட இந்தியப் பெருநிலம் முழுவதும் பரவியிருந்த தமிழினப் பண்பாட்டு அடித்தளத்தைத் தகர்த்து ஆரிய அடிப் படையாக மாற்றிக் காட்டி வருகிறார்கள். ஆதலின் தலைக்கழகம் நிறுவிய காய்சினவழுதி, இடைக்கழக வெண்டேர்ச் செழியன், கடைக்கழகத் திருமாறன் போன்ற பெருவேந்தர்களைத் தலைமக்க ளாகக் கொண்டு, ஆயிரக்கணக்கான பாடல்களில் அழகு மிளிர, தமிழ்ப் பண்பாடும் வரலாறும் உலகில் நிலைநிற்க ஒரு மாபெரும் வனப்பு நூலை இயற்றும் முயற்சியை இன்றே மேற்கொள்ளுங்கள். தங்களுக்குப் பிறகு தனித்தமிழன்பர்கள் பலர்வரினும் தங்களைப்போன்ற புலமையாளர் கிடைப்பது அரிது.

நான் தங்களினும் அகவையிலும் பட்டறிவிலும் சிறியவன். தமிழின ஏற்றத்திற்குப் பாடுபடுபவர் என்னை வைபவரயினும் வாழ்த்தும் மனப்பாங்கு கொண்டவன். என்பால் குறைகண்டு கூறுபவர் எவராயினும் மதித்து வரவேற்று என்னைத் திருத்திக் கொள்வேன். என் வேண்டுகோளைத் தாங்கள் ஏற்பின் மட்டிலா மகிழ்ச்சிகொள்வேன். — இரா மதிவாணன் சென்னை-101

0: 992: பெருமதிப்பிற்கும், போற்றுதலுக்குமுரிய தமிழினக் காவலர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்.

"என்மொழி, என்னினம்-என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன்"

என்று இருபத்தைந்தாண்டுக்காலத் தங்களின் சீரிய தொண்டில் எத்தனைத் தடைக்கற்களை யெல்லாம் பெயர்த்தெறிந்துவிட்டு, எதிர்நீச்சலடித்து இன்றைக்கு உலகளாவிய அளவில் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' 'தமிழ்நில'த்தை வளர விட்டுள் ளீர்கள். ஆனால்,

"எனக்குத் தெரியும் இந்தத் தமிழன்
என்றைக்கும் உருப்பட மாட்டா னென்பது;
தனக்கும் உதவான் தமிழுக்கும் உதவான்
தன்னின நன்மைக்கும் நாட்டுக்கும் உதவான்"

— என்ற தங்களின் துயரம் தோய்ந்த பாடல் வரிகளை மெய்ப் பிக்கும் வகையில்தான் இந்த ஏதுங் கெட்டத் தமிழினம் இன் றும் உள்ளது. இந்நிலையில் தென்மொழி இதழ் படிப்படியாக நின்றுவிடும்; அத்துடன் தமிழ்ச்சிட்டும் பறப்பதை நிறுத்திவிடும் என்று ஆசிரியவுரையில் எழுதியுள்ளீர்கள்.

ஐயா தங்களின் கனவு நனவாகும் நாள் வரத்தான் போகிறது. குறை கூறுபவர்-தூற்றுபவர்களைப் பற்றிக் கவலுறாமல் நடை போடுங்கள். பொருள் முட்டுப்பாட்டைக் களையத் திட் டங்களை வகுத்துத்தாருங்கள். அருள்களிந்து தென்மொழி-தமிழ்ச் சிட்டை நிறுத்தி விடாதீர்கள்! துயருறும் தமிழ் நெஞ்சத்தின் வேண்டுகோள் இதுவே!

— மணிமொழியன் வடக்குப்பட்டி., 622502